

374

Reg. No. M. 2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

8 MAY 1928 MADRAS OFFICE BOOK

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0

புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—

No. 11, வேள்ளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஆம் ஏப்ரல்மீ 12உ [No. 15.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	281
2.	காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L.	283
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L.	285
4.	தமிழ்ப் பாடம்	288
5.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L.	291
6.	அரசியல் மலர்வன மல்லிகை (Ruskin) K. இராஜகோபாலன்	294
7.	சித்திர கூடம் R. முத்தையர்	296
8.	வர்த்தமானம்	299

கலாநிலயம்.

உலகம் போகின்ற வழி.

இங்கிலாந்தில் மிக்க அறிவாளிகளுள் ஒருவராகக் கருதப்படுகின்ற எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்பவர், அந்நாட்டுத் தற்கால அரசியல் நிலைமையைப்பற்றி ஆழ்ந்து ஆராய்ந்து எழுதிய கட்டுரைகள் சேர்ந்த ஒரு புத்தகம் "உலகம் போகின்ற வழி" என்னும் பேரோடு இப்பொழுது பிரசுரமாயிருக்கின்றது. சென்ற ஜர்மனி யுத்தந்தான் இவ்வுலகத்தில் கடைசி யுத்தமாக யிருக்குமென்று முன் இவர் எண்ணியிருந்தது தவறுயிற்று என இப்பொழுது உணர்வதாகச் சொல்லி வருந்துகின்றார். ஐரோப்பாவிலுள்ள சில தேசங்கள் ஒன்றையொன்று வர்த்தக லாபத்தில் மிஞ்சுவதற்கும் மற்ற வகைகளிலும் செய்கின்ற முயற்சி இன்னுமொரு யுத்தத்திலேயே சென்று முடியும் என்பது அவருக்குத் திட்டமாய்த்தோன்றி யிருக்கின்றது. இவரைப் போலவே இன்னும் பல புத்திசாலிகள் அபிப்பிராயம் கொண்டுளர். நாட்டிற்கும் நாட்டிற்கும் உண்டாகக்கூடிய வழக்குக்களைச் சண்டையிடாமலே நடுநிலைமை நோக்கித் தீர்த்துக் கொள்வதற்கென்றமைந்த சங்கம் (League of Nations) பேருக்குப் பெரியதாய்த் தோன்றினும் காரியத்தில் ஒன்றும் உதவாது என்பது எச். ஜீ. வெல்ஸ் முதலான பல அறிஞர்களது கொள்கை. யுத்தம் என்பது எக்காரணம் பற்றி யெழுந்தாலும் அது இருதிறத்துத் தேசத்தவர்க்கும் எண்ணரிய கட்டமும் நட்டமும் வீணாக விளைப்பதல்லாது வேறெவ்விதப் பயனும் தருவதில்லை யாதலால் அதனை அறவே ஒழித்தகற்றுமாறு முயல்வது யாவருக்கும் உரிய கடனாகின்றது என்பர் வெல்ஸ் என்பவர். லீக் ஆப் நேஷன்ஸ் னிடத்தில் இவ்வுதவி எதிர்பார்ப்பதற் கில்லையே. ஆதலால் அந்த அந்த நாட்டு அரசாங்கத்தார் தத்தம்வரையில் பெரிது முயன்று யுத்தத்திலே கொண்டுபோய்ப் புகுத்தாமல் தம் குடிகளைக் காக்கவேண்டியது மிகவும் முக்கிய மாகின்றது.

ஆனால், இங்கிலாந்தில் அரசாட்சி அதிகாரம் தற்காலம் செலுத்திவரும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் இக்காரியத்தைக் கைக்கொள்வதற்கு ஏற்றவர்களல்லரென்பது எச். ஜி. வெல்ஸ் போன்றவர்களின் துணிபு. கட்சியின் ஆட்சி அங்குத் தன்தன்மை குலைந்துபோய் விட்டதென்று காட்டிப் பொதுவாகக் கட்சிக்குச் செல்வாக்கும் அதைச் சேர்ந்தவர் தத்தமக்கு உத்தியோகமும் பெறுவதற்கு வேண்டிய தந்திரங்கள் செய்து திரிவதே யல்லாமல் சனங்களுக்கு நிலைபெற்ற நன்மையைச் செய்து வைக்க நினைத்தவர் லிபரல் கட்சியிலேனும் லேபர் கட்சியிலேனும் இலர் என்று சாற்றுகின்றார். இருப்பினும் முதல் முதல் யாவரும் ஒன்றுகச் சேர்ந்து, இப்பொழுது இங்கிலாந்தில் அதிகாரம் வகித்திருக்கும் கட்சியினரைத் தோல்வியுற்று ஓடும்படி செய்வதே கடமையாம், என்பர். இல்லையெனில் இன்னும் ஐந்து வருஷம் இவர் அதிகாரத்திலிருப்பாரானால் முன் 1914-வது வருஷத்தில் ஆனது போலவே பின்னும் ஐரோப்பாவை அமர்க்

களம் ஆக்கிவிடுவர் என்பதிற் சந்தேகம் இல்லைபாம். ஜர்மனியார் அக்காலம் அடைந்த கதியை இங்கிலாந்து இப்பொழுது, அடையாமல் காப்பதற்கு உற்றவர் யாவரென ஆராய்கின்றனர். பிலிப் ஸ்னோடன், என்னும் லேபர் கட்சியினரைத் தலைவராக ஆக்கி அவரோடு லாய்ட் ஜார்ஜையும் ஒற்றுமையாய்க் கலந்துவைக்க நேருமாயின் இனி பொருதீங்கு இங்கிலாந்திற்கு வாராமல் ஒருவாறு காக்கலாம் என்பது எச். ஜி. வெல்லின் முடிவு.

எச். ஜி. வெல்ஸ் சொல்வன யாவும் தற்கால தந்திரங்களுக்கு ஏற்றனவென்றே உலகம் போகின்ற வழியைக்கருத்துடன் சிந்திப்பவர் யாவரும் கொண்டாடுவார் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் இவ்வகையான சமயோசித தந்திரங்கள் அரசியலிலேனும் அவரவர் வரையிலேனும் சனங்களை எந்காளும் வாழவைத்த துண்டோ? தற்கால தந்திரங்களைத் திப்பியென வகற்றி எக்காலத்திற்கும் இயன்ற சில வாய்மையினைக் கடைபிடிக்க வேண்டுமென நினையாமலே கழிவது என்ன மாயமோ! இவனென்றும் அவனென்றும் சிறுமானிடர்களுக் கெல்லாம் பெரும் பேரிட்டழைத்து, இன்னகட்சி வலிவுபெற்றால், இன்னவன் மந்திரியானால், அதனால் அத்தனை துன்பமும் தீமையும் தேசத்தினின்று தொலையுமென்றும், இதற்கு மாறாக இன்னொருவன் அதிகாரம் பெற்றால் எல்லார் குடியும் கெட்டுப்போய்விடும் என்றும் வீணே சொல்லிச் சொல்லித் தமக்குப் பகுத்தறிவு இல்லாமையை விளம்பரம் செய்து, இதைக் கேட்கும் பகுத்தறிவில்லா மர்களையும், இந்தக்கட்சிப் பேச்சையும் கலகங்களையும் தவிர வாழ்விற்கு வேறோர் நோக்கமும் பொருளும் உண்டென்றுகூட எண்ணவொட்டாமற் செய்து வைப்பானேன்.

ஆம், கட்சிகளையும் அரசாங்க முறைகளையும் ஆதாரமாகக்காட்டி விவகரித்தல்அந்தகச்செய்தி என்பதற் கையமேது? மாந்தர் தம் மனம் நோகநோகப் பொறுக்கின்ற புண்களிலே சட்டங்களாலும் அரசியல் அதிகாரிகளாலும் ஆக்குதற்கும் ஆற்றுதற்கும் உரிய பாகம் எத்தனை சிறிய தென்று உணராதார், மண்ணைப்பார்ப்பதற்குக் கண்ணிரண்டு உடையவரேயல்லாது உலகத்தின் தராதரங்களைத் தேர்கின்ற முதிர்ச்சியுற்றவராகார். குடிமக்களின் இன்ப துன்பங்களில் பெரும்பகுதி அரசியில் வகைகளால் நேர்வதில்லை. தன் செய்கையால் அடைந்த தீங்கைப் பிறர் செய்து வைத்ததாகப் பாவித்துக் கோபம் கொள்வதுபோலவே குடிகளின் துன்பத்திற் கெல்லாம் அரசாங்க அதிகாரமே காரணமாயிருப்பதாக எண்ணி உழல்கின்றோம். பொதுஜனத் தலைவர்களாயும் உத்தியோகம் வகித்தவர்களாயும் இருப்பவர்களுக்குத் தம்மால் உலகத்தின் துன்பத்தை ஆற்றுவது ஒரு சிறிதும் முடியாதென்பது நாலு நாளனுபவத்திற்குள் வெட்ட வெளியாய் விடும். ஆனால் பிறர்துன்பத்தை நீக்குவேன் என்று அவர் சொல்லி வந்தாலொழியத் தமது பதவியை (உண்மையிலே அப்பதவியும் அவர்களுக்கேயும் துன்பமே) இழக்காதிருக்க முடியாது. அவருடைய மனச்சாட்சி இடைவிடாது அவரை இடித்துரைத்துக் கொண்டிருக்கும். இருப்பினும், தமதொரு கையால் அதன் வாயைப் பொத்திக்கொண்டு மறுகையால் நாட்டின் சட்டங்களையும் உத்தியோக உத்தரவுகளையும் எழுதுகிறார்கள். ஆதலால், அரசியல் முறைகளில் ஊடாடுவதே முக்கியவேலையாய்க் கொள்வதாற் பயனில்லை என்று தெரிந்து கொண்டவர் மகாத்மா காந்தி ஒருவரே யல்லர். தலைவர்களாய் விவகரித்துப் பிச்சைக்காரன் சட்டைப்பையைப்போல் அம்முறைகளில் கையிட்டுத் தடவிப் பார்த்தவர்க ளெல்லாம் அதற்குள் ஒன்றுமில்லை என்பதை ஒவ்வோராளவு அறிந்து கொண்டிருப்பார் என்பதற்கு ஐயமேதேனும் உண்டோ. வெளிபே சொல்லிக்கொள்ள வெட்கத்தினாலும், அதனால் தமக்கு விளையக்கூடிய வேறு சில நஷ்டங்களாலும் வாய்திறக்காமல் முன்சென்ற வழியே பின்னும் பின்னும் போகின்றனர். அவ்வாறு போகாததாலன்றே காந்தியும் வீரராயினர்.

தலைவர் செய்தி இவ்வாறாக, அவர்களால் நடத்தப்படுகின்ற சனங்களில் பெரும் பகுதியோர் சொன்னதைச் சொல்லிக்கொண்டு செல்பராய்ப் பகுத்தறிந்து ஆராயும் வண்மையிலராய் அமைகின்றனர். ஜனங்கள் தம்மைக் கொண்டாட விரும்பிய தலைவர் அவர்களை அளவு கடந்து முகஸ்துதி செய்துவிடவே, அச்சனங்கள் சர்வ சக்தியும் தம் கையிலேயே அடங்கிக் கிடப்பதாக எண்ணிக் கொள்ள நேர்வது இயல்பே. ஆயின் முடிவென்ன? மனிதர் தம் புத்தியால் எற்படுத்துகின்ற சட்ட திட்ட நிர்மாணங்களால்தான் இவ்வுலகு நடை பெறுகிறதென்னும் எண்ணமும், இந்தத் திட்டங்களையே தம் சுகதுக்கங்கள் பொருந்தி யிருக்கின்றன வென்னும் நினைவும், அவர் வாழ்வை இயக்கத் தலைப்படுகின்றன. அதனால் எந்காளும் துன்பமே யன்றி விளைவன யாவையே!

இந்தவித நினைவுகளே துன்பத்திற்கு ஆதாரமாயிருக்க, அது அறியாமல் துன்பமே மேன்மேலும் பெருகக்கண்டு சகியாத சிலர் அரசியல் முறைகளையும் அதனை நடத்திவைக்கும் அதிகாரிகளையும் மாற்றவேண்டி, எச். ஜி. வெல்ஸ் போன்ற எண்ணிறந்தார் எங்கெங்கும் மன்றாடி ஏதுபயன். ஒருநாளும் மாறுத கடவுளின் விதிகளும் முறைகளும் நிலை நிற்கவில்லையோ! அவைகளைக் கைகடக்க விட்டு விட்டு இச்சிறு மானிடர் பெரும்பான்மைக் காமக் குரோதாதிகளால் செய்யும் சூழ்ச்சிகளைப் பற்றிக் கரையேறப் பார்ப்பவர் துன்பக்கடலிலே முழுகாமல் உய்வ தெங்ஙனம்.

எனவே, உலகம் போகின்ற வழி யெதுவெனில், கடவுளை விற்றுப் பேய்களை வாங்கக்கூடிய கடைத் தெரு இருக்கின்ற இடம் தேடிப் போவதே இக்காள் ஆகின்றது. தெய்வீக தர்மங்களை அருவினை தடைக்கும் மருந்தென நினையாது, அரசாங்கச் சட்ட திட்ட முறைகளால், அது எதுவே யாயினும், நன்மையை நாடித் திரிவது, தெய்வத்தைத் தூரத்திவிட்டுப் பேய்களிடத்தில் வரம் கேட்பதை ஒக்கும். பூசாரி யாரா யிருந்தாலென்ன!

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(265-வது பக்கத் தொடர்ச்சி)

12. கம்பன் கனவு.

மன்னனும் புதல்வன்தானும் மாளிகைவிட்டு நீங்கி நன்மைபெறு நினைவினோடுங் கோயிலுட்சென்று அங்குத் தத்தம் மனத்துளலரும் உவகையெனும் மலரால் அருச்சித்துத் தெய்வத் திருவருள் எய்திய மகிழ்வினராய் மீண்டனர். இன்னதுகண்டு அரசற்கு அமைஜன் வீராடபத்ரன் உள்ளம் புழுங்கினன். இவ்விருவரும் சித்தை பொருந்திக் கூடுவாராயின் தனது பாதகச் சூழ்ச்சி பழுதாகுமென அஞ்சினன்; தெய்வமே தூதுசெல்லக் கூடியோரைப் பிரித்துவைக்கப் பேயின் துணை வேண்டினனென விரைவிலோர் நிருபம் எழுதி, அதை நரபாலனுக்கு விடுத்துத் தீயனகதுவிய எண்ணத்தினனுய்த் துடித்தனன் வீராடபத்ரன்.

அன்னவன் அவ்வாறுகத் தந்தையொ டனவனாவி அமுது முடிந்தபின் தனதறையுட் சென்ற சித்ராங்கனுக்கு நித்திரை எளிதில் வரவில்லை. முன்றிலில் தோன்றிய அப்பாண்மகள்தன் உருவெளித் தோற்றம் நவரசம் காட்டித் தன்னை அழைப்பதுபோல் நிர்த்தனம் பண்ணினின்றது. 'காந்திமதி காந்திமதி காந்தாரநாட்டுக் கட்டழகி' என்னு மிந்நாமம் மாத்திரம் அவன் செவியருகு ஒலித்ததேயன்றி அவளது சாயையொன்றும் இடையாடி மாதவியின் உருவுடன் மாறுபட்டதில்லை. பலகணிக்கு வெளிப்புறம் இன்னுமொரு மாதின் நிழல் ஆடினதோ வெனும் உணர்ச்சியும் அவனுக்குண்டாயிற்று எனினும் அன்னதன் உருவமும் சாடையும் அறிந்திலன். படுக்கையிலிருந்து பொன்னென எழுந்தான். நிலா முற்றத்தின்கண் வந்து முன்னும் பின்னும்உலவினான். அப்பகல் மன்னவனவையில் நிகழ்ந்தனவெல்லாம்,.....நமன்வாயின் களிப்பதாய்த் தன்னை மணிவாளன் மதித்துப் பேசியதும், கோபாவேசம் கொண்ட கஜேந்த்ரவிம்மன் அறைந்த விரத மொழிகளும், கொக்கென வாடி வீராடன் நடித்த நடிப்பும், வாளன்றி யரசனுக்கு வெண்குடையு முண்டென்ற அத்தாயவர் அகிலாண்டேச்வர ஆசார்ய ஸ்வாமிகள் எடுத்து ஓதியதும், சலாகுப் பதுமையெனத் தன்தந்தை ஆட்டுவித்தோர் ஆட்டிவைத்தவிதம் ஆடியாடிச் சஞ்சலம் உறுவதும், சித்ராங்கனது நினைவினூடே ஒன்றன்மேலொன்று புரண்டும் திரண்டும் தொடர்ந்தும் உருன்வனவாயின. இன்னவாறு இவ்வெண்ணங்கள் முடிகிப் புகுந்து அவனது மனதைக் கலக்கிக் கடைசியில் தம்மூள் தாமே எற்றிமொறுங்கி அமிழ்ந்தபோது இட்ட குமிழிகளுக்கிடையே நரபாலனது கைக்குறை தானவனுக்கு அன்றுவிடுத்த ஓலைச்சுருளைக் கதுவி மிதக்கக் கண்டவனுனன். ''சே, செ! நரபாலன் வாய்மையாளனல்லனுயினும் நானவனை இவ்வளவு வெறுப்புடன் உதறித் தள்ளுவது நீதியாகாது. என்பால் எப்பிழையும் இழைத்திலன். என்னைத் தீவழி உய்த்தானென்றால் புகுந்தவகை எனதே யன்றே! தாக்கமோ வரவில்லை. மற்று, அவனிடம் சென்று நயமொழி கூறியே அவனது சேர்க்கையிலிருந்து விலகுதல் தக்கது,'' என மதித்துச் சித்ராங்கன் வெளியேறி நரபாலனது வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

நரபாலன் படுத்திருந்த அறைக்குள் எவலாளர் அரசகுமாரனைச் செலுத்தி விலகினர். மஞ்சத்தருகு வந்து சித்ராங்கனும், ''நரபால, நரபாலா, நின் மெய்வருத்தம் மிகுதியோ, நரபால,'' எனப் பரிவுடன் வினவினன். நரபாலன் அரைக்கண் திறந்து, '' இளவரசே, களைமேலிட்டிருக்கின்றது. சற்றுப் பொறுத்துப் பேசுகின்றேன், இக்கிரு,'' என்று சோர்ந்துரைத்துக் கண்களை மூடிக்கொண்டான். சித்ராங்கன் தன்னைக் காணவருவானென்றவன் எதிர் பார்த்ததில்லை. இப்பொழுது என்னவாறு நடந்துகொள்வ தென்பது தெரியாமல் திகைத்தான். சித்ராங்கன் அனுப்பிய நிருபத்தின் வாசகம் தூண்டிய சினத்தால் அவனைக்கொன்று பழிதீர்ப்பதெனத் தாமோதரனுடன் செய்த சிந்தனை ஒரு சிறிது சோர்வடையலாயிற்று. இனி, அதற்கும் இதற்கும் இடையில் வீராடபத்ரன் அனுப்பிய செய்தியொன்று புதியது புகுந்திருக்கின்றது. மற்றுச் சித்ராங்கனிடத்தில் உள்ளன்பு அவன் எந்காளும் கொண்டிலனுயினும் வெகுநாள் பழகிய வாசனையால் இவனைக் கொல்வதற்கு அவன் மனம் தாழ்வதும் இயல்பே. சித்ராங்கன்முதல் விச்வகேசரி ஈறுக எல்லாரையும் கொன்றுவிட்டுக் காந்தாரநாட்டு மகுடம் தரிக்க அவ்வைத்தியன் தனக்குக் கற்பித்தது தன் அவாவிற்கு எற்றதேனும் அது சாத்திய காரியமன்று என்பதும் அவன் ஊகிக்க வல்லவன். அந்நாடெங்கும் இவன் படுகொலையன் என்பது பிரவித்தம். காந்தாரநாட்டுப் பிரஜைகள் எளியரல்லர். அவர்முன் துஷ்ட னொருவன் சிம்மாதன மேறி அரைக்கணம் தரிப்பது துர்லபம். ஆதலால் களைமேலிட்ட காரணம்கூறிக் கண்களை மூடிய நரபாலன் இவ்விஷயங்களின் பலாபலன்களைச் சீர்தூக்கிப் பின் தான் துணிவதற்கான கருமத்தைக் கருதவே அவகாசம் வேண்டினன். முடிவில், '' ஆசைக்கும் ஓர் அளவு வேண்டும். இந்நிந்தனை நிருபம் வரைந்தது சித்ராங்கனேயாயினும், வரைந்த கையை இயக்கியது அரசன தாணையே. வீராடபத்ரனையும் நம்பலாகுமோ! அதனிலும் அம்மியுணையாக ஆறு இறங்கலாமே,'' என்று தீர்மானங்கொண்டு சித்ராங்கன் அமர்ந்திருந்த இடம் திரும்பி, '' இளவரசே, நின் திருமுகம் எய்தப் பெற்றேன்!'' என்றனன்.

'' நரபால, வருந்தேல். அன்னதிலுள்ள முட்கன் தம்மை அராவுதற்கே வந்துளேன்,'' என இயம்பினன் சித்ராங்கன்.

'' மார்பில் தைத்தபின் முள்ளைக்களைந்து ஏது பயன்!''

'' நரபால, முள்ளில் விழுந்தது நீயே. என்னை நொந்தும் பயனில்லை.''

'' சித்ராங்கா, கப்பணம் தேடிக் கலிழ்ந்தது யானே. இளவரசே, இக்கரந்தனை நோக்குதி. சித்ராங்கா, நின்னை வளர்த்த கை, நீவேண்டிய விளையாட்டை வாங்கித்தரும் கை, உன் ஆணையை நடத்தும் கை, நின்னை நட்புடன் பற்றும்கை.....அரசே நின் எவலில் அற்றது,'' என்று நரபாலன் தனக்கேபரிந்து கண்ணீர் சொரிந்தான். சித்ராங்கன் அதைக்காணக் கூசியவனுய், '' நரபாலா, இது வினையின்பயன். யார்கடப்பார், கையைமூடுவாய்,'' என உரைத்தான்.

'' இது வினையின் வந்ததாயினும் அதைச்செய்து வைத்தவர்களைச் சும்மாவிடேன்!''

'' மற்று, யாதுசெய்ய வல்லை, நீ!''

"பழியிற் பாதிவாங்கியாய்விட்ட தென்று எண்ணுகின்றேன்" என்று நரபாலன் வேலையாளையழைத்து மகோதரன் வந்திருந்தால் அவனை அவ்விடம் அனுப்பச் சொன்னான். மகோதரனும் பச்சையிரத்தம் படிந்த உடலினனுய்க் கோடரியைத் தோளில் தொங்கவிட்டுப் பத்துவிரலையும் தன் சிக்கிய சடைக்குள் புகுத்திச் சொறிந்தவண்ணமாய்க் கறுத்த பல்லுடன் இளித்தவாயனுய் எதிர்வரச் சித்ராங்கன், "நரபாலா, இந்தக் கிராதகனை எனதருகு சேரவிடாய். காணவே என்னகம் கூலேகின்றது. உயிர் பதைக்கின்றது. போகச்சொல் இவனை," என்று பதறினன்.

"இளவரசே, விளைந்தது கேட்போம். இச்சமயமிவன் நின்னைக் கருதிவந்திலன்——ஏனடா, மகோதரா, காரியம் முடிந்தது காண்கிறேன். ஆனால் ஆன் அவன்தான் என்பது நிச்சயமா? எப்படித்தெரிந்து கொண்டாய்?"

"நடையில் தெரியாதா, உடையில் தெரியாதா! அவன் பாடும் பாட்டில்தான் தெரியாதா!" என்றனன் மகோதரன். 'சரி, போ! என்று நரபாலன் கட்டளையிட அக்கொலைஞன் போனபின் சித்ராங்கன், 'நரபாலா, எவனது மரணத்தைச் சாதித்திருக்கின்றுய் இச்சமயம்,' எனக்கடிந்து கேட்டான்.

"புன்தொழில் கம்மியன் தொலைந்தான். நரபாலனது கைக்கு அவன்தலையே ஈடு ஆகாதெனினும் அவனது இரத்தம் பெய்தே என் சினத்தைச் சிறிது தணிக்கக் கருதினேன்.....சித்ராங்கா, கேள், நீயுமித்தருணம் ஆபத்தினுள்பட் டிருக்கின்றுய்!"

இதுகேட்ட சித்ராங்கன் துள்ளிக்குதித்து உடைவாள் இடைதேட, நரபாலன் நகைசெய்திட்டுத் "தமர் பிறர் தெளியாததோடு கருமமும் கருவியும் அறியாப் பேதாய், அஞ்சுவதேன். ஆறிநின்று நானுரைப்பது கேள்.....சித்ராங்கா, உனது சிற்றப்பன் விராடபத்ரன் நினது உயிர்தேடித் திரிகின்றுன்" என்றான்.

"ஆயின், வெகுகாலம் வெகுதூரம் தேடவேண்டும். மற்று, உன்னை வழிகாட்ட வேண்டியதுண்டோ! நரபாலா, அதிகாரத்திலவனுக்கு ஆசையிருக்கலாம். ஆனால் இவ்வரசி லவனுக்குக் கண்ணிராது."

"அவன் எண்ணத்தி னெல்லையை நீ தேராது பேசுகின்றுய்..... இந்நிமிஷம் நீ கொல்லவோ இல்லையேல் கொலையுண்ணவோ வேண்டியதொரு அரிய நிலையில் இருக்கின்றுய்."

"யார், யாரை?"

"உன்னுயிரை வாங்குதற்கு இத்தருணம் விராடபத்ரன் என்னுடன் வேல கூறிக் கொண்டிருக்கின்றுன்.....அவன் கைப்பட வரைந்த கடிதமும் எனது தலையணையின்கீழ் இருக்கின்றது."

"ஆதலால்.....?"

"மானவோ...மாய்க்கவோ...வேண்டும்."

"என்ன! நரபாலா, இராஜ இரத்தத்திலும் உனது கையைத் தோய்க்கத் தலைப்படுகின்றனையோ!"

"அற்றன்று, சித்ராங்கா, இவ்வளவுதானு நீயறிந்தது! இரத்தம் பெருகவே வேண்டியது இல்லையே. ஔஷதம் மந்திரம் ஆயின சாதனங்களுள. உயிர் தானுகவே ஒடுங்குவது முண்டு. விளக்கை நந்தி அதற்கு எண்ணெய் வார்க்காதுவிட்டால் சுடர்தானே யணைந்து போகாதோ? இளவரசே, சாகவிடுவது கொல்ல முயல்வதாகாது."

"ஒகோ, பண்டித, அச்சக் சூத்திரம் மறந்தேன். விடுக்கட்டும். விராடபத்ரன் அணைவதால் உனக்கு என்ன லாபம்?"

"ஒன்றுமில்லை. உன்னைக் கருதியே யுரைக்கின்றேன்."

"இல்லை, இல்லை, இதை ஏற்பதற்கில்லை. விராடபத்ரன் உன்னைத் துணை வேண்டியிராஞுயின் ஒருவேளை நீ என் நன்மையைக் கருதியே உரைத்தனை என நம்பி இருந்தாலும் இருப்பேன். இப்பொழுது அவன் தரும் ஊதியத்தின் பெரியது நினைத்து என் சார்பு நிற்கின்றுய் என்பதில் சந்தேகமேது. நரபாலா, உண்மையுரை!"

"சித்ராங்க இளவரசனை இன்றே சக்ரவர்த்தியாக்கப் பார்க்கின்றேன்."

"நரபாலப் பிரபுவும் முதன் மந்திரியோ! ஒகோ, சுமந்திரரே, ஆயின் நமது தந்தை யென்னவாவது? அவரும் கந்தாது எண்ணெய் விடாது அணையவேண்டிய வரேயோ!"

"சித்ராங்கா.....அதற்கு நீ மனம் பொருய் என்பது அறியேனே? தருதியுமன்று. சிறைவாசமே....."

"ஏனடா, பாபி, நீ பின்னிடும் பாதகமும் உளதோ. அட துரோகி, உன் பேராசைக்கு அவதியெங்கே! உற்ருர் பெற்ருேர் இரத்தத்தால் எனக்கு மஞ்சனநீராட்டி, பெரும்பாவ முடிசூட்டி இங்ஙகாத்தை ஆள வைத்துப் பேயே நீ என் பக்கத்திலாடச் சூழ்கின்றனையே....."

"சித்ராங்கா, இளவரசே....."

"ஃபீ, சி, உன் ஊத்தை வாயை அங்காந்து இனி என் பேரை அழைக்காதே..உன்னைத் தேசப் பிரஷ்டனேயாக்கக் கருதினர் என் தந்தை. இப்பொழுது நீ புகன்றது சொல்லிச் சிரச்சேதம் செய்து வைக்கின்றேன் பார்!" என்று சித்ராங்கன் எழ, இது நிகழா வண்ணம் விலக்குவதற்கு மறுபடி மகோதரனை அக்கணமே அழைத்துச் சித்ராங்கனது உயிரை முடிப்பதே வழியென்று நரபாலன் முதலில் எண்ணி யவனைக் கூப்பிட வாயெடுக்கும்போது வேறுசில வெண்ணங்கள் இடைபுகுந்து அவ்வாயை யடைத்தன. 'சித்ராங்கன் கையிலோ வாளொன்றுளது. மகோதரன் வருவதன்முன் தன் கழுத்திற்கும் அக்கத்திக்கும் வெகு தூரமில்லை. அல்லது, மகோதரன் குடிவெறி தலைக்கேறி அச்சமயம் மாக்கட்டையாய்க் கிடக்கலாம்...சித்ராங்கன், நான் கொலைகொண்டு மருட்டத் தப்பி வெளியேறி விடுவானுனால் பிறகு தன் நாவின் உதவியால் தலைகாத்தல் இயலாது,' என்று நரபாலன் வெகுவேகமாய்த் தன்மனத்துள் சிந்தித்து: "அரசே வேண்டுகின்றேன். இதுகாறும் யாமிருந்த உறவையேனும் கருதி என்னைப் பொறுப்பாய். உன் காலில் விழுந்து பணியவோ என்னால் எழுந்திருக்க இயலவில்லை. உன் பணியில் ஒருகை யிழந்தேன்; கும்பிடுவ தெனினும் அது அரைக் கும்பிடேயாகும்.....பெருமை, சித்ராங்கா, பொறுத்தருள்வாய்," என்று கண்ணீர் வடிப்பவனுயினுன்.

"என்ன, நரபாலா, என்னவிது, பிறவுயிர்க்காடிய நீ உன்னுயிர்க்கோ அழுகின்றுய். 'இரணத்தின் வலியாற் சொன்னேன்,மருந்தின் மயக்கத்தாற் சொன்னேன்,அல்லது 'உன்மன நினையின் தாய்மையைச் சோதிக்கவே சொன்னேன்' என்று ஏதேனும் புகன்று உன் உரைமாற்றும் வகை தெரியாமலோ அழுகின்றுய்!"

"அரசே, தஞ்சம். உண்மையே சாற்றின் நின்னருள் எளிதிற் பெறுவது கூடும் என்பதுணர்வேன். 'பொறுத்தேன்' என்றுநீ கூறிடுவாயாயின் அவ்வாய்மையைக் காப்பாய் என்பதும் நிண்ணம்...என் நிலை கொடியதெனக் கருதி அரசன்மாட்டு இதைச் சாற்றியே நிர்வாயாயினும் என்!...விராடபத்ரனையும் உடன் இழுத்து மாண்டேன்...அவனுக்குக் கிடைக்கின்ற கதிதானே என்னையும் சேரும்!"

இளவரசன் நரபாலனது அழுத கண்ணிற்கு ஒரு பக்கம் இரங்கியும் கொடியனேயாயினும் தன் சிறிய தந்தையின் கதிக்கு மறுப்க்கம் அஞ்சியும் "நரபாலா, இதனுடு விடுத்தேன். மறுமுறை நீ எம் குலத்தில் கையிடத் துணியாய் என மதிக்கின்றேன்... நினது இரணம் ஆறியதும் இக்கர்விட் டகல்வாய்.....நீ எங்கிருப்பினும் எனது உதவி வேண்டிய விடத்துத் தெரிவித்துக் கொள்.....தக்க காரியத்தில் நானுன்னை இன்னும் கைவிடேன். ஆனால் காந்தாரநாட்டு நான்கெல்லைக்குள் தாமதிக்க எந்நாளும் நினையாதே," என்று விடுத்து அம்மாளிகைவிட் டகன்றனன்.

நரபாலன், சித்ராங்கன் போன வழியையே சிறிது நேரம் வைத்தகண் வாங்காது பார்த்திருந்தான். தனது சூழ்வினை யெல்லாம் சிலத்தி பின்னிய வலையெனச் சித்ராங்கன் வாய்க்காற்றால் ஊதிச் சிதறவடித்தது அவனுக்கு வியப்பொடு வெகுளியும் அளித்தது. அதனுடன் கைப்புண்ணளித்த வலியும் பெருக அவன் வைத்தியன் வைத்துப்போன மருந்தை எடுத்தருந்தினன். சிறிது தூக்கமும் வந்தது. கண்ணயர்ந்தான். மேல்நாள் விண்ணுலகு அடைந்துவிட்ட கோப்பெருந்தேவி அவனது அமளிக்கருகு நின்று, "ஏடா, துரோகி, யான் இவ்வுலகு நீங்குங்கால், நிரபராதியாயும், சூதறியாதவளுயும் மனக்கலக்கமில்லாதவளுயும் நின் கையடைத் தேகிய என்னருமந்த புதல்வன் எங்கேயடா? அப்பாலனைத் தீவழி புகுத்திப் புழுங்கிய மனத்தின ஞுக்கினையே, விச்வாசகாதகா!" என்று கேட்க, நரபாலனும் கழிவிரக்கம் கொண்டு அவ்வரசியினிடம், "இறைவி என்பிழை பொறுத்தி" எனுக் கையை நீட்டினன். ஆனால் அம்முகம் கறுகிக் கடுகடுத்துக் கஜேந்திரவிம்மனதாய் மாறிவிட்டது. அதைக்கண்டு கோவென்றலறிக் கண் திறந்தான். ஒன்றையும் காண்கிலன்:— "ஆகா, பிழைத்தேன், பாழும் கனவுதானே!" என்று பெருமூச்செறியலாயினன். ஆம், ஆம், கம்ஸன் கண்டதும் கனவுதான்!

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 268)

திருமறம்-கல்லாடனுர்.

கல்லாடம்:—கல்லாடனுரது திருமறம் நக்கீரனுரது போன்று அத்துணை நீண்டதுமல்ல; கதையினை அவ்வளவு விரிவாக எடுத்துரைப்பதும் அல்ல. கல்லாடனுர் தமது கல்லாடத்திலும் கூட இக்கதையினைக் குறித்துள்ளார். ஒன்று மறியா வேடனது வழிபாட்டிற்கு மகிழ்ந்துபோய், அவன் கொண்டுவந்தூட்டும் எச்சில் இறைச்சியை நிரம்ப உண்டு, "இன்னும் இறைச்சி இல்லையோ" என்று அவாவி நிற்பவன் என்று இறைவனை இகழ்வது போல அவனது அருளின் திறத்தைப் புகழ்கின்றுர்.

"முன்னெனு சாலத் தடுகொலைக் கணைந்த
மூகிலுருப் பெறுமோர் கொடுமரக் கிராதன்
அருமறைத் தாபதன் அமைத்திடு செம்மலைச்
செருப்புடைத் தாளால் விருப்புடன் தள்ளி
வாயெனும் குடத்தில் வரம்பெற எடுத்த
அமுதுகடற் றள்ளு மணிநீர் ஆட்டிப்
பின்னல்விட் டமைந்த தன்றலை மலரினைத்
தருமலர் விண்புக மணிமுடி நிறைத்து
வெள்வாய் குதட்டிய வீழுதுடைக் கருந்தடி
வைத்தமை யாமுன் மகிழ்ந்தமு துண்டவன்
மிச்சிலுக் கின்னும் இச்சைசெய் பெருமான்"

என்பது கல்லாடம். இவ்வாறு இறைவன் தன்னை இழித்துக் கொண்டது இதனுல் என்பதனை இம்மறத்திலே எடுத்து இயம்புகின்றுர்.

வேடத் திருமேனி:—அன்பானது ஓர் உடலும் உயிரும் பெற்று உலகில் உலவுவது போன்றவன் அக்கண்ணப்பன். பின்னபட்ட வாரினைக் கால்மேல் போர்த்தி, உன்னங்காலில் ஒட்டிக்கிடக்கும் செருப்பினை இறுகக் கட்டிக் கொண்டான். இடுப்பைச் சுற்றிலும் தோலுடையாகிய கச்சொன்றினை வரிந்து கட்டினன். அதிலே எஃகால் செய்த சரிகைக் கத்தியைச் செருகியும் வைத்தான். அல்லும் பகலும் வேட்டையாடி உயிர்களை அலைக்கழித்துக் குத்திக்குத்திக் கொன்றுவருவதால் அச் சுரிகையில் குருதிக்கறை மறைந்தபாடில்லை. (ஊசி கொண்டு தைப்போர் அவ்வூசி விரலில் குத்திக்கொள்ளாதபடி பித்தளையில் பூண்செய்து நடுவிரலுக்கு இட்டுக் கொள்வது போல) வில்லை வளைத்து நாண் எறிகையில் கைவழுக்கித்தசை பிய்த்துப் போகாதபடி கைக்கட்டியும் அணிந்தான். தோலாற்செய்த நீண்டபையில் மெத்தென்றிருப்பதற்காக, அப்பை நிறையச் சிறுகச் சிறுக வெட்டிய குறுமயிர் இட்டு அடைத்து வார்கொண்டு கையில் இறுகக்கட்டி இருந்தான். இதுவே இவனது கைக்கட்டி. புலியினது வளைந்த உகிரினையும் பன்றியினது வெள்ளென்றிருக்கும் கோரைப் பல்லையும் ஒன்று மாற்றி ஒன்று வைத்துக் கோத்த மாலை ஒன்றைத் தன் மார்பில் அணிந்திருந்தான். அதைவிட்டால் அவனுக்கு மேலாடை என்பது வேறு ஒன்று இல்லை. நெற்றியைச் சுற்றிலும் நீலநிறம் பொருந்திய மயிற்பீலியை அழகாகச் சூடி நின்றுன். அதனுலே காடுபோல அடர்ந்துகிடக்கும் தலைமயிரில் பலகறைகளைக் கோத்துப் புனைந்து கொண்டான். வேர்க்க வேர்க்க வேட்டையாடி மேலெல்லாம் குருதி ஒழுக விலங்குகளைக் குத்திக்கொன்று அவற்றின் புலாலை உண்டு பின் வாய்கழுவாதும் உடல் குளியாதும் திரிந்துவரும் அவ்வேடுவனது அருகில் அணுகாதபடி வீச்சம் அடிக்கும். அவன் வடிவோ ஓ எனும் எழுத்தைப்போல வளைந்து முறுக்கிக்கொண்டு கிடக்கும்.

(சிவபெருமானும் இவனது இனத்தாரே) இவன் வேட்டையில் வேங்கைப் புலிகளைக் கொல்வது போலச் சங்கரனரும் புலியினைக் கொன்று அதன் தோலை வெற்றியின் அறிகுறியாக அணிந்துகொள்ள வில்லையா! [இத்தகைய இழிந்த வேடனை சிவபெருமானுடைய அடியவர் இனத்தில் தலைசிறந்தவன், இனம் இனத்தைக் காக்கும்.]

வேட்டை வழிபாடு:—இவ்வேடன், குறிதவறுது பட்டுருவிக் கொன்றே தொலைக்கும் கூரிய அம்பும் நீண்ட வில்லும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

செங்குத்தாய் வானத்தில் தொங்கவிட்டாற்போலத் தனித்தனியாய் நிற்கும் உயர்ந்த கல்கள் நிரம்பிய மலைகளானவை நெருங்கி அடர்ந்திருக்கும் பாலவனத்தில் காற்றைப்போல் விரைந்து பறந்து தாவிக்குதித்துத் தாண்டி ஏறி இழிந்து ஓடி, விலங்குகளைத் தேடித் திரிந்தான். வில்லைச் சடக்கென வளைத்துக் குறிபார்த்து விசையிற் செல்லும் மிகக் கூரிய அம்பினைவிட்டுக் கொழு கொழுத்த பன்றிகளைப் பார்த்துக்கொன்றான். கொன்றவற்றை அம்பைக்கொண்டு தோல்போகக் கிழித்துத் தசையைக் கூறுபோட்டு, அரிந்தரிந்து தன் அம்பில் கோத்தெடுத்து நெருப்பை நன்றாக மூட்டிக் காய்ச்சினான். நன்றாக வெந்ததோ, இனிதாக இருக்கின்றதோ என்று நாவிலிட்டுச் சுவைத்தும் பார்த்தான். அதுவே இறைவனுக்கு உணவாவது. திருமஞ்சனமாட்ட எண்ணித் தண்ணீரைத் தன் வாயே குடமாக முகந்து சென்றான். திருப்பள்ளித் தாமமாகச் சாத்தத் தன் தலையில் பூக்களைப் பொதிந்து வைத்துக்கொண்டு போயினான். கானப் பேரானை கண்ணுதலது திருமுன்பு வந்து நின்றான். அவரது திருமுடியில் அதற்கு முன்பு வழி பாடுசெய்து சென்ற சிவகோசரியார் இட்டுப்போன பூக்களை எல்லாம் செருப்படியால் உதைத்துத் தள்ளினான்.

கண்ணப்பர்:—'என்னே! இவ்வேடன் இவ்வாறு செய்கின்றானே' என்று மனமிரங்கிய கோசரியாருக்கு இவனுடைய அன்பின் ஆழத்தைக்காட்ட எண்ணினார் கடவுள். முக்கண் அப்பனார், தமது வலது திருக்கண்ணில் செங்குருதி பொங்கி வழிவதுபோலக் கண்ணப்பனுக்குக் காட்டி நின்றார். கண்டான் வேடன். கண்ட அப்பொழுதே அழுது கீழ் வீழ்ந்தான். பலவகையாலும் தொழுதான். "ஏதேனும் செய்தாலன்றே இது தீரும்" என நினைத்துச் 'சரேல்' எனக் குதித்து எழுந்தான். ஆற்றுமை மிகுதியால் "ஐயையோ' என அரற்றிப் புலம்பிக்கொண்டே ஓடினான். புனங்களில் சென்று மருந்துகளைத் தேடிக்கொண்டு வரினும் அவற்றால் எல்லாம் இக்நோய் நீங்காதென்று அவனுக்குத் தோன்றியது. தன்னையே மருந்தென்று தன் கண்ணை இடந்து அப்பினான். குருதி அப்பொழுதே நின்றுவிட்டது. ஆனால், மற்றொரு திருக்கண்ணிலிருந்தும் குருதி ஒழுகியது. "இது முன்னைய கண்ணில் வந்தநோய் போன்றதே ஆகவே மிகுதிநிற்கும் மற்றொரு கண்ணையும் அப்பி விடுவேன்' என்று அம்பின் நுனியால் கண்ணை அகழத் தொடங்கினான். வீணை வாட்டி வருத்துவதைப் பொறாத ஆண்தன்மை மிக்க ஆண்டவனார் கோசர்க்கு வேடனது வெள்ளப் பெருக்கெடுக்கும் மேலாம் அன்பின்னைக் காட்டியது போதும் என்று எண்ணினார். தமது திருக்கையால் வேடனது இரண்டு கைகளையும் சட்டெனக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். "இதோ பார் எமது புண் ஒழிந்து போயது. நீயே நல்லவன் நீயே நல்லவன்" என்று கூறித் தடுத்தார். தட்டிக் கொடுத்தார்.

பிறவிக்கு மருந்து:—இனிச் சிவனைத் தொழவேண்டுவதில்லை. நல்லவன் என்று சிவபெருமானாலேயே கொண்டாடப் பெற்ற இத்திருவேட்டுவரது திருவடியைக் கைதலைக்கிக் கும்பிட்டாற் போதும். வினையினால் தாயின் கருப்பையைத் தேடிப்போய்ப் பிறந்திறப்பதே தொழிலாய் நாம் படும் பாடெல்லாம் அடியோடு ஒழிந்துபோகும்.

கதைப் போக்கு:—இதுவே கல்லாடனார் கண்ட கண்ணப்பர் கதை. எவ்வாறு கண்ணப்பர் கதையை இப்பெரியார் எடுத்துரைக்கின்றார்?

"பரிவின் தன்மை உருவுகண் டனையவன்"

என்று தொடங்குகின்றார். இம்முதலடி கண்ணப்பரது உயர்தனிச் சிறப்பை முன்னராகவே சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் அவனது உருவையும் வடிவையும் அணியையும் செயலையும் பாருங்கள். நகைப்புக்கிடமாய் இகழ்தற்குரியவாய் இருக்கின்றன. அவனது வன்பு நிலையைக் கண்டபின் அவனது அன்பு நிலையை உணரலாகுமோ? இவ்வேற்றுமையை எல்லோர் மனதிலும் எளிதிற் பதியவைத்தற்காகவே தொடக்கத்திலேயே அவன் அன்புருவன் என்று எடுத்துக்காட்டி அவனை உயர்ந்தோன் எனப் புகழ்ந்ததற் கேற்ப, மரபுபற்றி "உள்ளங்கால் முதல் உச்சி வரை" முறையே புனைந்துரைத்துப் போகின்றார்.

"போழ்வார் போர்த்த தாழுசெஞ் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சினன்
தோல்தெடும் பையிற் குறுமயிர் திணித்து
வாரில் வீக்கிய வரிக்கைக் கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல்வெண் மருப்பும்
மாறுபடத் தொடுத்த மாலை உத்தரீயன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்வினன்"

என்று அவனது வார்த்தோல் கட்டிய செருப்பினையும் சுரிகைக் கத்தியையும், கச்சையையும், மாலையையும், பீலியையும் பலகறையையும் புனைந்துரைத்து அவற்றில் அவனது அன்புநிலை அடங்கியிருக்கின்றதா என ஆராய்ந்து, அவற்றில் அவனது இழிதகைமையும் அறிவின்மையும் கீழ்மையுமே இருப்பனவாகக் காட்டுகின்றார் கல்லாடனார். சிறுகச் சிறுக அவனது இழிவின் பெருக்கை விளக்கிக்கொண்டே போய் அவனுடைய இழிவின் உயர்தனிச் சிறப்பை "மூடலை நாறும் குடிலை யாக்கையன்" என்று விளக்கி அவனது வீச்ச நாற்றத்தையும் வளைந்த உடலையும் எள்ளி இகழ்ந்து நகையாடுகின்றார். இவ்வாறு இளிவரற் சுவைக்குறிப்பும் நகைச்சுவைக் குறிப்பும்தோன்ற அவனைப் புனைந்துரைத்த பின்

"வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன்னினைத் தலைவன்"

என்பதாக இத்தகையவனே சிவனடியாரிற் சிறந்து விளங்குபவன் எனத் தெளிவுறுத்தி மற்றொருமுறையும் வேற்றுமையை நமது மனத்திலே எழுப்பிக் காட்டுகின்றார். சிறப்பைக்கூறியவர் அடுத்தாற்போல இழிவையும் கூறுகின்றார். காட்டிலும் மலையிலும் வாழும் விலங்குகளைப்போல ஓடித்திரிந்து வேட்டையாடிவந்து அவன் செய்யும் வழிபாட்டினை எல்லோரும் எள்ளி நகையாடுமாறு சுருக்கமாகக் குறித்துவிடுகின்றார்.

ஒங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனம் காற்றினில் இயங்கிக்
கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த ஊட்போ னகமும்
தன்தலைச் செருகிய தண்பளித் தாமமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீரும்
கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசனை அடியால் நீக்கி"

என்று அவன் வழிபட வரும் நிலையினைப் பாடுகின்றார். "செருப்படி" எனக்கூற மனங்கூசி வாளா அடி எனவே கூறிவிடுகின்றார். மறைகள் சொல்லிய முறைப்படி வழிபடும் கோசரியார்க்கு இவனது போன்பு எவ்வாறு விளங்கும்! அவருக்கு இவனது அன்பினை நேரில்காட்ட

எண்ணினார் கடவுள் என்பதாக மறுபடியும் கண்ணப்பனது உயர்வை நமக்கு நினைப்பூட்டுகின்றார். கண்ணப்பன் செய்கையைத் திறம்பட விரித்துரைக்கின்றார்.

"நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசம் காட்ட
முக்க ணப்பனுக் கொருகணில் உதிரம்
தெக்க ணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தாற்றி"

என்பதாக இவன் புலம்புவதனை அவலச்சுவைக் குறிப்புத் தோன்றக் கூறினார். உயிரையும் கொடுத்ததுவும் வள்ளல்களைப் போல

"புனமருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றைக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ"

என்றபடி தன் கண்ணிரண்டையும் முன்பின் பாராது அகழ்ந்ததுவ முன்வந்த செயலினைப் பெருமிதப் சுவைக் குறிப்புத் தோன்றக் கூறி உள்ளனர். இக்கண்ணப்பன் சிவனுலே புகழப் பெற்றான். சிறுகுழந்தை பூச்சிக்காரனைக்கண்டு அஞ்சியோ, தாய் இல்லையே என்று வருந்தியோ அழுவது கண்டு தாயானவள் மனம் பொறுதவனாய், விளையாடியது போதியதென்று வெளிவந்து "இதோபார் பூச்சிக்காரன் போய்விட்டான். உன் தாய் நான்இதோ இருக்கிறேன். என்மேல் இத்துணை அன்பா உனக்கு - நீயே நல்லகுழந்தை - என்கண்ணே" என்று புகழ்ந்து தட்டிக்கொடுத்த அழுகை ஓயப்படுத்துவது போலச் சிவபெருமானும் சிறுகுழவிபோல அன்புருவாய் நின்ற கண்ணப்பனை

"ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்
நல்லை நல்லை"

என்று தட்டிக் கொடுத்ததைப் புகழ்கின்றார். இனிச் சிவன் ஒருவன் எதற்கு என்கின்றார். இக் கண்ணப்பனைப் போற்றினால் போதாதா: வினையும் ஒழியும் வீடும் பெறலாம் என்று கண்ணப்பனை உயர்த்திக் கூறி முடிக்கின்றார்.

"நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட் டோற்றம் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே"

இதுவரையில் ஒருமையில் கூறி வந்தவர் இப்போது திருவேட்டுவர் எனப் பன்மையாற்கூறி உயர்த்திப் போற்றுவது காண்க.

மருட்கை.—இவ்வாறு இக்கதைப் போக்கில் நகையும் இளிவரலும், அவலமும் பெருமிதமும் தோன்றினாலும், இதனில் சுவையாக மூற்றி விளங்குவது மருட்கையேயாகும். கொலைத்தொழிலைக் கண்டு குலைதடுங்கிப் பின் அன்புநிலையைக் கண்டு "இது என்னே மாறுதல்" என வியந்து நின்றார். நக்கீரனார். கல்லாடனாரோ வேறு வகையில் வியந்து நிற்கின்றார். செயற்கரியதும் செய்ய மாட்டாத சிறியோரில் மிக மிகக் கடையோனாகிய அறிவிலா வேடன் பலகறையும் பன்றிப் பல்லும் அணிந்து கொண்டு எல்லோரும் என்னி நகையாடும் வழிபாடியற்றிய கானவன்—செயற்கரிய செய்வாரில் பெரியோனாகித் தன் கண்ணையும் பிடுங்கித் தந்து கடவுளால் புகழப் பெற்றானே என்று வியந்து நிற்கின்றார். போசிரியர் "இனி, மதிமை சாலா மருட்கை, என்றமையானே சிறுமைப்பொருள் பெருந்தொழில் செய்தலும் பெருமைப் பொருள் சிறுதொழில் செய்தலும் வியப்பாம் என்க" என்று தமது தொல்காப்பிய உரையில் கூறியுள்ளதை இங்கு உற்று நோக்கவேண்டும். கீழான குடியிற் பிறந்து கீழ்க்குடிச் செய்கையையுடைய கண்ணப்பர் மேலானவரும் செய்தற்கரிய பெருஞ் செய்கை செய்தமை கண்டு இங்கு வியப்புத் தோன்றியது.

சேக்கிழார்:—இவை எல்லாம் சேக்கிழார்க்கு முன்னூல்களாகும். அவருக்கு முதல்நூல், சுந்தரரது திருத்தொண்டத் தொகையும் அதன் வழிநூலாக நம்பியாண்டார்நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியுமேயாகும். "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்" என்கின்றார் சுந்தரர். அதனை விரித்துரைக்க வந்து வழிநூல் இயற்றிய நம்பியாண்டார் நம்பி

நிலத்திற் றிகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற்
குருதிகண் டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணை யாற்றன்
மலர்க்கண் ணிடந்தப்பினான்
குலத்திற் கிராதன்நம் கண்ணப்ப
னுமென்று கூறுவரே.

எனப்பாடுகின்றார். சார்புநூல் செய்தயர்ந்த சேக்கிழாரது கதையின் விரிவைப்போக்கிச் சொல்லுவோம். அக்கதைச் சுருக்கத்தை ஒரு செய்யுளில் அடக்கி உமாபதி சிவாசாரியர் தமது திருத்தொண்டர் புராண சாரத்தில் பாடியுள்ளார்.

வேடராதி பதியுடுப்பூர் வேந்த னுகன்
வினங்கியசேய் திண்ணனூர் கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமும் குஞ்சிதருமலரும்
காய்ச்சினமென் றிடுதசையும் காளத்தியார்க்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவும் அளிப்பச்
சீறு சிவகோசரியும் தெளிய விழிப்புண்ணீர்
ஓடவொரு கண்ணப்பி ஒருகண்ணப்ப
ஒழிக எனும் அருள்கொடருகுற நின்றாரே.

என வருதல் காண்க.

உவகை:—இனி இந்தச் சேக்கிழார் பாடிய கதையில் சுவையாகத் தோன்றி விளங்குவது யாது? பலசுவைக் குறிப்பும் தோன்றுகின்றன என்பதைப் பின்னர்க் கதையினை விரிவாக ஆராயும்போது காண்போம். ஆனால், இவற்றில் சுவையாகமூற்றி முதிர்ந்தது உவகையேயென்று உறுதியாக இங்கேயே உரைத்து விடலாம். இவ்வுவகைச் சுவை அன்புச்சுவை எனப்போற்றத் தக்கதாகும். அன்புடையார் இருவர் இணைபிரியாது கூடி நின்று இன்பந் துய்ப்பதுபோலக் கண்ணப்பனாரும் உள்ளத்தே உவகை ததும்பி ஒன்றுகூடி நின்றனர். அன்பராயினர் தமது காதலருக்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்ததேபோல எண்ணி மனம் வருந்திப் பின் அந்நோய் தீரும்வகை யறிந்தால், தம் முடல்பொருள் ஆவி மூன்றினையும் பிறி தொன்றும் பாராது வருத்தம் என்பது சிறிதுமின்றி அகமகிழ்ந்து தந்ததுவதல் போலக் கண்ணப்பனாரும் கடவுளுடைய கண்ணிற் புண்ணைக் கண்டு வருந்திப் பின் தம் கண்ணை இடந்து அப்பின் அந்நோய் தீரும் என்று தோன்றியபோதே, சிறிதும் தாழ்க்காது கண் போய்விடுகின்றதே என்றும் கலங்காது நோகும் என்று தயங்காது, அகமகிழ்ச்சியோடும் கண்ணை அம்பினால் அகழ்ந்து ஒடித்து, அப்பினார். பின்னரும் மற்றொரு திருக்கண்ணில் நின்றும்

புண்ணீர் ஒழுகி வழிந்தபோது மிருதியாய் நின்ற தமது இரண்டாம் கண்ணையும் அகழப் போயினர். அவ்வாறு அகழ்வது அவருக்குப் பெரியதோர் இன்பமாயது. அவர் செய்கின்ற வழிபாட்டினைச் சேக்கிழார் இளிவரற் சுவையேனும் நகைச் சுவையேனும் தோன்றக் கூறாது அக் கண்ணப்பரது பேரன்பால் நிகழ்ந்த வழிபாடு எனக் காட்டிக்கொண்டே போய் உவகைச் சுவைபடப் புனைந் துரைத்துள்ளார். ஆகவே அன்பர்கள் கூடிய பொழுது எழுந்து விளங்கும் உவகைச் சுவையினையே சேக்கிழார் பாடிய கதையில் முற்ற முடிய யாம் உணர்ந்து துய்க் கின்றோம்.

சுவை யாராய்ச்சியின் முடிவு.

டி. பி. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 15.

நள வெண்பா

(272-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

சோலையில் அன்னத்தின் பயனிலாச் சொல்பெருக் கிற்கு ஆற்றாது சோர்வடைந்த நளன், தன்னுணர்வை மீண்டும்பெற்று ஒருவாறு தேறிய உன்னத்தனுப்த் தன தகம் சென்றெய்திச் சிலநாள் கழிவதன்முன் விதர்ப்பன் அனுப்பிய தூதர்கள் இங்கும் வந்து சேர்ந்தார்.

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினர்—போதிற்
பெடையோடு வண்டிறங்கும் பேரொளிநீர் நாடன்
அடையாத வாயி லகம். 54.

வந்த இத்தூதர் நளனுக்குத் தம் செய்தியைத் தெரி வித்ததை அடுத்த செய்யுள் தெரிவிக்கின்றது.

காவலன்றன் தூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புதலு—மாவிற்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து. 55.

பதப்பிரிவு:—காவலன்தன் தூதர் கடை காவலர்க்கு அறிவித்து, ஏவலில் போய் ஈது என்று இயம்புதலும் மாவில் பொலிந்த தேர் பூட்டு என்றான் பூ வாளி பாய மெலிந்த தோள் வேந்தன் விரைந்து.

அன்வயம்:—காவலன்தூதர் கடைக் காவலர்க்கு அறிவித்து ஏவலில்போய் ஈது என்று இயம்புதலும், பூவாளிபாய மெலிந்ததோள் வேந்தன் விரைந்து (பாக னைப் பார்த்து) 'மாவில் பொலிந்த தேர் பூட்டு' என் றான்.

பதவுரை.

காவலன் தன் - விதர்ப்பராஜனுடைய
தூதர் - தூதர்கள்
கடைக் காவலர்க்கு - (நளனினுடைய) வாயில் காப்போருக்கு
அறிவித்து - (தாம் வந்திருப்பதை) தெரிவித்து,
ஏவலில் - (அவர்களது) அநுமதியின்மேல்
போய் - (உள்ளே) போய், (நளனிடத்தில்)
ஈது - (தாம் வந்த செய்தி) இது
என்று - என்று
இயம்புதலும் - (தமயந்தியின் சுயம் வரத்தைப் பற்றி) சொன்னவுடன்,
பூ - புஷ்பங்களாலிய
வாளி - (மன்மதனுடைய) பாணங்கள்
பாய - பாய்ந்ததால்
மெலிந்த - இளைத்திருக்கின்ற
தோளான் - தோள்களையுடைய நளன்
விரைந்து - பரபரப்புடன் (சாரதியைப் பார்த்து)
"மாவில் - குதிரையிலே
பொலிந்த - பிரகாசம் பொருந்திய
தேர் - தேரை
பூட்டு - பூட்டுவாய்,"
என்றான் - என்று கூறினன்.

விரிவுரை:—மெய் தளர்ந்திருந்த நளன் தமயந்திக்குச் சுயம்வரம் என்பதைக்கேட்கப் படபடத்துச் சீக்கிரத்தில் அங்குச் செல்லவேண்டுமே எனும் அவசரத்தால் வாய் தடுமாறித் 'தேரிலே குதிரையைக் கட்டு' என்பதற்குப் பதிலாகக் 'குதிரையிலே தேரைக் கட்டு' என்று கூறி யது இயற்கையாம். மனதயர்ந்து ஒவ்வொருவேளை சொற்களும் செயலும் ஒன்றிற்கொன்று மாறி நிகழ்வது எல்லா ரனுபவத்திலும் நேர்ந்திருக்கும். இதைக் குறிக்க ஆங்கிலத்திலே ஸ்பூனரிஸம் (Spoonarism) என்றொரு வார்த்தை இப்பொழுது புதிதாக வந்திருக்கின்றது. இத் தச்சொல் ஸ்பூனர் என்றவொரு ஆங்கிலேய பண்டிதர் செய்கையையொட்டித் தோன்றிற்று. அவர் தன்னினைவை அடிக்கடி மறந்து வேடிக்கைக்கிடமான பல செயல்கள் செய்வதும் பேசுவதும் வழக்கமாம். ஒருநாள் இவர் வெளியூருக்குப் பயணமானபோது இரயில் ஸ்டேஷ னுக்கு அவர் மனைவியும் வழியனுப்ப வந்திருந்தாள். சாமான்களைக் கொண்டுவந்த கூலிக்காரனும் வண்டியி னருகில் நின்றுகொண்டிருந்தான். இரயில் புறப்படும் போது நம் ஸ்பூனர், கூலிக்காரனுக்கு முத்தம்கொடுத்து விட்டு மனைவியின் கையில் கூலிப்பணத்தை வைத்தா ராம். அருகிலிருந்தவர் சிரித்தபோதும் அவருக்குத் தன் செய்தி விளங்கவில்லை என்று சொல்வர்.

கெட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் நீள்வரம்பி
லிட்ட பசுங்குவளை யேரடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடனுடை னூர்க்கு
விரையத்தே ருரென்றான் வேந்து. 56.

சடைச்செந்நெல் பொன்வினைக்குந் தன்னூடு பின் [னுகக்
கடற்றானை முன்னுகக் கண்டான்-அடற்கமைந்த
வில்லியரும் பொற்றும வீமன் றிருமகளாம்
நல்லியரும் வாழு நகர். 57.

இவ்விரு செய்யுள்களும் நளன் புறப்பட்டு விதர்ப்ப நாடு நோக்கிப் போவதைச் சொல்கின்றன. இவன் இப் படிப் போய்க்கொண்டிருந்த சமயத்தில் தேவலோகத் தில் நடந்தவொரு நிகழ்ச்சியைப் பற்றிக் கவி பின் கூறு கின்றார்.

நெற்றித் தனிக்க ணொருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவ—னுற்றடைந்தான்
தேனூடுந் தெய்வத் தருவுந் திருமணியும்
வானூடுங் காத்தான் மருங்கு. 58.

பதப்பிரிவு:—நெற்றி தனி கண் நெருப்பை குளிர் விக்கும் கொற்றம் தனி யாழ் குலம் முனிவன் உற்று அடைந்தான் தேன் ஆடும் தெய்வ தருவும் திரு மணியும் வான் நாடும் காத்தான் மருங்கு.

அன்வயம்:—பின் இரண்டு அடிகளையும் முதல் வைத்துப் படித்தால் இந்தச் செய்யுளிற்கு அன்வயம் ஆகும்.

பதவுரை.

தேன் - வண்டுகள்
ஆடும் - மொய்த்துப் பறக்கின்ற
தெய்வ - தெய்வத்தன்மை பொருந்திய
தருவும் - ஐந்து விருக்ஷங்களும்,
திரு - இரண்டு நிதிகளும்,
மணியும் - ஒரு மணியும்,
வான் நாடும் - தெய்வலோகமும்,
காத்தான் - ஆள்கின்றவனுகிய இந்திரனுக்கு
மருங்கு - சமீபத்தில்;
நெற்றி - (சிவபிரானது) நெற்றியிலிருக்கிற
தனி - ஒற்றையாகிய
கண் - கண்ணினுடைய
நெருப்பை - நெருப்பையும்
குளிர்விக்கும் - குளிர்வடையும்படி செய்யவல்ல
கொற்றம் - வெற்றி பொருந்திய
தனி - ஒப்பற்ற
யாழ் - வீணையைப் பயிலும்
குலம் - நிறைந்த
முனிவன் - நாரத முனிவன்
உற்று - சென்று
அடைந்தான் - சேர்ந்தான்.

விரிவுரை:—நாரதமுனிவன் வீணைகானத்தினது இனி மையை இதைவிட நயமாய் உரைத்தவர் யாருமிலர். சிவ பிரானது நெற்றிக் கண்ணே முனிவனது யாழின் இசையால் ஆனந்த வெள்ளம் பெருகித் தன்னிடத் துள்ள தீயை அவித்துக்கொள்ளும் என்றால் வேறு கூறவானேன்.

குறிப்பு:—1. இந்திரன், பஞ்ச தருக்களுக்கும் இரு நிதிகளுக்கும் ஒருமணிக்கும் வானுலகிற்கும் அதிபதி. பஞ்சதருக்களாவன:—சந்தானம் அரிசந்தனம் மந்தாரம் பாரிஜாதம் கற்பகம். இரு நிதிகளாவன:—சங்கநிதி பதுமநிதி. ஒருமணி:—சிந்தாமணி.

2. நாரதருடைய வீணைக்கு மகதி என்று பெயர்.

3. தனி:—இந்தச் சொல்லிற்கு ஒற்றை (solitary) என்றும், ஒப்பற்ற என்றும் (unique) என்றும் இருக் கின்ற இரண்டு பொருள்களும் இந்தச் செய்யுளில் வந் திருக்கின்றன.

4. காத்தான். என்பது இங்கு வினைமுற்று அல்ல. இந்தச் செயலைச் செய்தான் என்று அது காட்டவில்லை. செயலைச் செய்தவனைக் காட்டுகிறது. ஆதலால் இந்த இடத்தில் அது வினையால் அணையும் பெயர். [248-வது பக்கம் பார்க்க]

வீரர் விறல்வேந்தர் விண்ணூடு சேர்கின்றூர்
ஆரு மிலராலென் றையுற்று—நாரதனூர்
கன்முகமே நோக்கி னுகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து. 59.

வந்த நாரதனைப் பார்த்து இந்திரன், "பூலோகத்திலி ருந்து அரசர்கள் வீரர்கள் யாரும் சிலநாட்களாய் எனது சபைக்கு வருகின்ற தில்லையே, இதற்குக் காரணம் யாவ தாயிருத்தல் கூடும்" என்று ஐயுற்றான்—என்பது இச் செய்யுளின் கருத்து.

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சுயம்வரத்து — மாமன்னர்
போயினு ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினன் மாதவத்தோர் மன். 60.

அதற்கு நாரதர், 'தமயந்தியின் சுயம்வரத்திற்கு யாவ ரும் போவாராகின்றனர். அவளுக்குச் சுயம்வரம் நடக் கின்றதென்றால் உன்னூரை யார் திரும்பிப் பார்ப்பார்" என்று பதில்சொன்னர். சொல்லி, அடுத்த செய்யுளில் தமயந்தியின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றார்.

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு. 61.

பதப்பிரிவு:—அழகு சுமந்து இளைத்த ஆகத்தாள் வண்டு பழகும் கரும் கூந்தல் பாவை மழ களிற்று வீமன் குலத்துக்கு ஓர் மெய் தீபம் மற்று அவளே காமன் திரு வுக்கு ஓர் காப்பு.

பதவுரை.

(அந்தத் தமயந்தி)
அழகு - அழகை
சுமந்து - சுமப்பதால்
இளைத்த - மெலிந்துபோன
ஆகத்தாள் - சரீரத்தை யுடையவள்.
வண்டு - வண்டுகள்
பழகும் - நீங்காத
கரும் - கருமையான
கூந்தல் - கூந்தலையுடைய
பாவை - பதுமையைப் போன்றவள்.
மழ - இளமை பொருந்திய
களிற்று - யானைகளையுடைய
வீமன் - பீமராஜனது
குலத்துக்கு - குலத்திற்கு
ஓர் - ஒப்பற்ற
மெய் - மெய்போல் அழிவில்லாத
தீபம் - விளக்குப் போன்றவள்.
மற்று - அதுவன்றி
அவளே - அவள்தான்
காமன் - மன்மதனுடைய
திருவுக்கு - செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும்
ஓர் - ஒரு
காப்பு - காப்பாக இருப்பவள்
என்று நாரதர் இந்திரனுக்குக் கூறினர்.

விரிவுரை:—அழகு பேரழ காதலால் அதை இடை விடாமல் சுமந்து சுமந்து தேகமும் இளைத்துப் போயி ஞளாம் தமயந்தி. தமயந்தி மெல்லியல் மங்கை என்பது இதன் கருத்து. அவள் மெல்லிய தன்மையுடையவ ளாவதற்குக் காரணம் அவளது அழகின் மிகுந்த பாரமே என்று கவி சாதுர்யமாய் வர்ணித்திருக்கின்றார். உத் தம மாதருக்குக் கூந்தல் இயற்கையிலேயே மணம் கம மும் என்பது மரபு. ஆதலால் மலர் அணிந்த காலத்தும் அணியாத காலத்தும் வண்டுகள் மொய்க்கப்பெற்ற கூந் தலே யுடையவள். வீமராசனின் குலத்தை விளக்க வந் தானாதலால் மெய்த்தீபம் ஆயினள். காமன் திருவிற்கு ஓர் காப்பு என்பதின் கருத்துத் தெளிவாக இல்லை. அதற்குப் பலவாறு பொருள் கூறலாம். கற்புப் பிறழாது தம் காதலைத் தாங்குகின்ற மாதர் இவளைப்போன்றவர் இருப்பதால்தான் மன்மதனுடைய ஆட்சி அழியாமல் வளர்கின்றது, எனக்கொள்ளுதல் ஒருவாறு பொருந்தும்.

குறிப்பு:—பாவை, என்பது இங்குப் பாவைபோன்ற தமயந்தியைக் குறித்தலால், அது உவமையாகு பெயர். மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்-சால்புடைய
விண்ணுடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணுடு கோக்கி மகிழ்ந்து. 62

நாரத முனிவருடைய வார்த்தைகளைக்கேட்ட இந்திரனும் மற்ற தேவர்களும் தமயந்தியின் சுயம்வர மாலையைத் தாம் பெறுவதற்கு ஆசைப்பட்டுத் தேவலோகத்தைவிட்டு விதர்ப்பனுடைய நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயின
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி [தன்
வருவான்போற் றோர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது.

பதப்பிரிவு:—பை தெரியல் வேல் வேந்தன் பாவை பால் போயின தன் சிந்தை கெடுத்து அதனை தேடுவான் முந்தி வருவான்போல் தேர்மேல் வருவானை கண்டார் பெரு வானில் தேவர் பெரிது.

அன்வயம்:— பெருவானில் தேவர், பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபால் போயினதன் சிந்தைகெடுத்து அதனைத் தேடுவான் முந்திவருவான்போல் தேர்மேல் வருவானை, பெரிது கண்டார்.

பதவுரை.

பெரு - பெரிய
வானில் - ஆகாயத்திலிருந்து
தேவர் - தேவர்கள்,
பை - பசுமையான
தெரியல் - மாலையைச் சூட்டிய
வேல் - வேலாயுதத்தை ஏந்திய
வேந்தன் - வீமராஜனது
பாவைபால் - பெண்ணினிடத்திலே
போயின - போய்விட்ட
தன் - தன்னுடைய
சிந்தை - ஸ்மரணையை
கெடுத்து - காணுது
அதனை -அந்த நினைவை
தேடுவான் - தேடும்பொருட்டு
முந்தி - விரைந்து
வருவான்போல் - வருகின்றவனைப்போல்
தேர்மேல் - தேரின்மேல்
வருவானை - வருகின்ற நளனை
பெரிது - நன்றாக
கண்டார் - பார்த்தார்.

விளக்கம்:—கண்டார் (பயனிலை). யார் கண்டார்? தேவர் கண்டார். எப்படிக் கண்டார்? பெரிது கண்டார் - நன்றாகக் கண்டார். எங்கிருந்து கண்டார்? வானில் கண்டார் - ஆகாயத்திலிருந்து கண்டார். எப்படிப்பட்ட வானிலிருந்து? பெருவானில் - பெரிய ஆகாயத்திலிருந்து. பெரிய வானத்திலிருந்து தேவர் யாரை நன்றாகக் கண்டார்.? வருவானைக் கண்டார் - வருகின்றவனைப் பார்த்தார். எதன்மேல் வருவானை? தேர்மேல் வருவானை. எதனைப்போல் வருகின்றவனைக் கண்டார்? வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார் - வருபவனைப்போல் தேர்மேல் வருகின்றவனைக் கண்டனர். எப்படி வருபவனைப்போல்? முந்தி வருவான்போல் - விரைந்து முற்பட்டு வருபவனைப்போல். எதன் பொருட்டு முந்தி வருவான்போல்? தேடுவான் - தேடும் பொருட்டு. எதனைத் தேடுவான்? அதனைத் தேடும் பொருட்டு. என் அதனைத் தேடுவான்? கெடுத்து அதனைத் தேடுவான் - காணுதபடியினால் அதனைத் தேடும்பொருட்டு. எது அது? சிந்தை-நினைவு. யாருடைய சிந்தை? தன் சிந்தை. எந்த சிந்தையது? போயின தன் சிந்தை. எங்குப் போய்விட்டது அது? பாவைபால்-பெண்ணினிடத்தில். யாருடைய பெண்ணினிடத்தில்? வேந்தன் பாவைபால் - விதர்ப்பனுடைய பெண்ணினிடத்தில் எதைத் தாங்கிய வேந்தன் அவன்? வேல்வேந்தன் - வேலாயுதத்தைத் தாங்கிய வேந்தன். எதைச் சூட்டியவேல் அது? தெரியல்வேல் - மாலையைச் சூட்டிய வேல். அம்மாலை எப்படிப்பட்டது? பைந்தெரியல் - பசுமையான மாலை.

விரிவுரை:—சுயம்வரத்தைக் கருதிச் செல்கின்ற நளனின் தோற்றம் இங்கு வெகு அழகாக வருணிக்கப்பட்டுனது. அவனது நினைவானது அவனைக் கேட்காமல் முன்னதாகவே ஒடிப்போய்த்தமயந்தியினிடத்தில் தங்கிவிட அதைக் காணுதவனாகி வழியில் எதையோ தேடிக்கொண்டு போகின்றவனுடைய முகமும் பார்வையும் உடையவனாய்ப் பிரமைபிடித்துச் சென்றான் நளன், என்பது இதன் கருத்து.

வேலாயுதத்திற்கு மாலை சூட்டுகின்ற வழக்கத்தை முதலடி குறிக்கின்றது.

குறிப்பு:—தேடுவான், என்பது, வான் என்னும் முடிவுபெற்ற வினை எச்சம். இதன் இலக்கணத்தை 191-வது பக்கத்தில் பார்க்கலாம். இங்கு வினைமுற்று அல்ல.

வருவான், வருவானை:—என மூன்றாவது அடியில் வரும் பதங்கள், வினையாலணையும் பெயர்கள்.

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோ
னேவற் றொழிலுக் கிசையென்று—னேவற்கு [ன்
மன்னவனு நேர்ந்தான் மனத்தினுண் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து. 64.

இந்திரன் நளனைச் சந்தித்துத் தான் 'சொல்கின்ற காரியத்தைச் செய்' என்றான். நளனும் அது இன்னது என்னதென்று யோசிக்காமல் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டான், என்பது இச்செய்யுளின் பொருள். அதன்மேல் இந்திரன் எனினதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
யெங்களிலே சூட்ட வியல்வீமன்--மங்கையால்
தூதாக வென்றானைத் தோகையைத்தன் னெஞ்சத்தால்
கோதாக வென்றானைக் கோ. 65.

வேந்தனே, நீ எமக்காகத் தமயந்தியிடம் தூதுபோய் சுயம்வர மாலையை எங்களுக்குள்ளே ஒருவருக்குச் சூட்டும்படி செய்யவேண்டும் என்றான் இந்திரன். இதைக் கேட்டவுடன், சொன்னதைச் செய்கின்றேன் என்று கொடுத்த வாக்கிற்கும் தமயந்தியின்மீது இருந்த காதலுக்கும் இடையே நளனது மனம் தடுமாறிற்று. எனினும்கடைசியில் வார்த்தையைக்காக்கவேண்டும் என்னும் துணிபே வெற்றிகொள்ள தமயந்தியை மெய்ம்மைக்கு முன்னிலையில் ஒரு பயனற்ற பொருளாக விலக்கி விட்டானேனும் அவன் நெஞ்சு பதைத்ததைக் கவி அடுத்த செய்யுளிற் சொல்லுகின்றார்.

தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவிற்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவி
னிழல்போலுந் தண்குடையா னெஞ்சு. 66.

நூல்பாவில் (Loom), நெய்யும் குழலானது (Shuttle) இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் மாறிமாறி அலைவது போன்று, தாமரை மலரின் நிழல்போலக் குளிர்ந்த குடையையுடைய நளமகாராஜனது மனம், தேவர் விதித்த எவலைச் செய்ய நினைக்கும், மறுபடி ஒருதரம் தான் விரும்பும் இளம் கன்னியின் நினைவிற்குத் திரும்பி வரும், என்பது இச்செய்யுளின் கருத்து.

தாமரைப்பூ குளிர்ச்சியானது. நிழலும் குளிர்ச்சியானது. குளிர்ந்த வஸ்துவின் நிழல் பின்னும் குளிர்ச்சியாயிருக்கும் என்பது உண்மையோ என்று நாம் முதல் நினைவில் எண்ணும்படி "பூவின் நிழல் போலும் தண்குடை" என இக்கலி நம்மோடு விளையாடுகின்றார்.

ஆவ துரைத்தா யதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரிற்—காவல்
கடக்குமா றென்னென்றான் காமநீ ராழி
அடைக்குமா றுள்ளத் தவன். 67

பொழிப்புரை:—பிறகு, காமக்கடலை அடக்கவல்ல மனதையுடைய நளன், இந்திரனைப்பார்த்துத் "தேவர்களுக்கு வேந்தனே, நான் செய்யவேண்டியது சொல்லியருளும். அதற்கு உடன்பட்டேன். ஆனால் தமயந்தியினிடத்தில் சென்று உங்கள் தூதினைச் சொல்ல காவற்காரர்கள் விடமாட்டார்களே. ஆதலால் காவலெல்லாம் கடந்து நான் கன்னிமாடம் போவ தெப்படி?" என்று வினவினான்.

விரிவுரை:—ஸத்ய சிலனாதலால் நளன், உடன்பட்ட காரியம் இடையூறு இல்லாமல் நிறைவேறுவதற்கு வழி கேட்கின்றான். சிறிதளவு வஞ்சனையுடையவனாயின், இந்தச் சந்தேகத்தைத் தேவேந்திரனிடம் சொல்லாமல், தூதுபோவதுபோல் போய்ப் பிறகு கன்னிமாடத்திற் குள்ளே விடமாட்டே னென்று விட்டார்கள்; நா னென்ன செய்வேன்' எனத் தன்கடனைக் கழித்துவிடலாம். அப்பொழுது நளன் காத்த மெய்யானது உயிரில்லா மெய்யாகும். சொல்லளவில் தேவர்களுக்குக் கொடுத்த வாக்கை அவன் மறுக்கவில்லை யாயினும், செயல்வகையில் அது பொய்யாகும். 'மெய்ம்மைநளன் என்பான்' அவ்வாறு போலி வாய்மைக்குத் தன்னை அடிமையாக்கிக் கொள்ளான். இவைகளை எல்லாம் உத்தேசித்துத்தான்போலும் நைடதத்தின்படி இந்திரன், "செயிறறு தூது நீ செல்லவேண்டும்," என்று கேட்டுக் கொண்டது. செயிர் அறு, என்றால் குற்றமற்ற, அதாவது வஞ்சனையற்ற, என்பது அர்த்தம். "வஞ்சனையில்லாது மனப்பூர்வமாய் நீ தூது போகவேண்டும்," என்று சொல்வதே அவனுடைய மெய்ம்மையை அயிர்த்தெனும் பழுதுதோன்று மாதலால் புகழேந்தி அவ்விதம் தன் இந்திரனைக் கூறவைக்கவில்லை.

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரை
யைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றேளான்—யாரு
மூனைக்
காணர்போய் மற்றவனைக் காணென்றான் கார்வண்
டின்
பாணறைந் தாராணைப் பார்த்து. 68

அதைக்கேட்ட இந்திரன் "உன்னை ஒருவரும் காணுதபடி நீ செல்ல நான் வரம் தருகின்றேன். அதன் உதவியைக்கொண்டு நீ போய்த் தமயந்தியைப் பார்," என்றான்.

பிறர் கண்ணிற்புடைபடாமல் சஞ்சாரம் பண்ணக்கூடிய சக்தியைத் தருகின்ற மந்திரத்திற்கு மாலிகாஞ்சன மந்திரம் என்பது பெயர்.

இனி, நளன் புறப்பட்டுக் குண்டினபுரம் போய்ச் சேருகின்றான்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

3. நகரப் படலம்.

[276-ம் பக்கத் தொடர்ச்சி]

வர்த்தகஞ் செய்பவர் வண்மையு மோம்புவார்.

அயோத்திமா நகரின் அமைப்பையும், பொழுதுணர்வதற்கரிதாய தன்மையும், ஆடவரும் மடவாரும் அப்பொழுதினைப் போக்குகின்றவாறும், நன்மணமும் இன்னிசையும், கண்டு நுகர்ந்து இனிது கேட்டோம். இனிக் காண்பதற்கிருப்பன கடை வீதியும் பொது மண்டபங்களுமே.

சூளாமணியில் தோலாமொழித்தேவர் தன் போதன நகரை வருணிக்குங்காலையில், அதன்பாலுள்ள ஆவணத்தை

பளிங்குபோழ்ந் தியற்றிய பலகை வேதிகை
விளிம்புதோய் நெடுங்கடை வீதி வாயெலாம்
துளங்குபூ மாலையுஞ் சுரும்புந் தோன்றலான்
வளங்கொள்பூங் கற்பக வனமும் போலுமே.

[பெரிய கடை வீதியில் எல்லாம், ஸ்படிகக் கற்களைப் பிளந்து ஆக்கிய பலகைகளையுடைய மேடைகளின் ஓரங்களில், பொருந்தி அசைகின்ற பூமாலைகளும் வண்டுகளும் தோன்றுவதால் அவ்வீதி, வனம்நிறைந்த மலர்களையுடைய கற்பகச் சோலையை ஒக்கும்.]

என்று சிறப்பித்தார். தன்னகர்க் கடை வீதியை நினைத்தபோது கம்பருக்கு இச்செய்யுள் மனதில் தோன்றியதோ யாதோ! இக்கருத்தை யெடுத்துத் தன்னூலில் அமைத்துக்கொள்வதற்கு முதலில் இவர் எண்ணியிருக்கலாம். ஆனால்,

"அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு
மனகையு மென்றிவை யயனூர்
பயிலுற வற்றபடி பெரும்பாலு
மிப்பெருந் திருநகர் படைப்பான்"

என்றிவர் முன்னரே விளம்பிவிட்டபடியால், தேவர் சொல்லிய விதம் தனதார் ஆவணத்தைச் சொல்லவியலாதென வோர்ந்து, அயோத்தியோடு ஒரேவரிசையில் வைத்து எண்ணுதற்கும் தகுதியற்ற அமராவதியை விலக்கி அனகாபுரியை நாண வைக்கின்றார் போலும். இல்லையெனில்,

கோவையிற் நகரொடெண் குறிக்க லாதவத்
தேவர்தற் நகரியைச் செப்பு கின்றதென்
யாவையும் வழங்கிடத் திகலி யிந்நகர்
ஆவணங் கண்டபி னனகை தோற்றதே.

88998

[இந்த நகரத்தோடு வரிசையில் வைத்துக் கணக்குக் குறிப்பதற்கும் கூடாததேவர்களது நகரமாகிய அமராவதியை இதற்குச்சமானமாகச் சொல்லவும் சொல்லலாமோ! எல்லாப் பொருள்களையும் வழங்குவதில் இந்நகரோடு மாறுகொண்ட அனகையும், இதன் கடைவீதியைக் கண்டபின் தோற்றுப்போயது.]

என்று அயோத்தியின் அங்காடியைக் கம்பர் சிறப்பாகக் கொண்டாடுவானேன்? அளகாபுரி தோற்றதோ இல்லையோ, முன்னிரண்டு அடிகளால் தோலாமொழிப் புலவர் தோற்றுப் போயினரோ என்னும்படி இச்செய்யுள் அமைந்திருக்கின்றது.

தனிமனைகளல்லாத பொதுக் கட்டிடங்கள் நான்கே காட்டுவார் நம்புலவர். "இந்தச் சிறைச்சாலையைப் பார், எத்துணை அகன்றது! இவ்வயித்தியச் சாலையைப் பார், எத்துணை நீண்டது? இந்த வழக்கிழுக்கும் மன்றங்களைப் பார், எத்துணை உயர்ந்தன. சட்டசபைக் கட்டிடம் இவை, எத்துணை பெரியன? என, அந்நகர் செய்துள்ள தவம் பெரியதாதலால், அங்குக் காட்டுவதற்கில்லை. இவையாவும் அழிகின்ற நகரங்களின் அடையாளங்கள். மற்று, வாழ்கின்ற நகரில் வளர்மாட மேல்வீடு யாவையோ வெனில்,

மன்னவர் தருகிறை யனக்கு மண்டபம்
அன்னமென் நடையவ ராடு மண்டபம்
உன்னரு மருமறை யோது மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்.

[அரசர்கள் கொடுக்கின்ற கப்பப் பொருள்களை அனக்கின்ற மண்டபம். அன்னம்போன்ற மென்மையான நடையையுடைய மாதர்கள் ஆடும் மண்டபம். நினைத்தற் கருமையான அரிய வேதங்களை ஒதுகின்றமண்டபங்கள். சொல்வதற்கு அருமையான கலைகளைத் தெரிந்து கொள்கின்ற பட்டி மண்டபம்]

பொதுநிதிச் சாலைகளும் நாடகச் சாலைகளும் தவிர அங்கிருப்பன வேதசாலைகளும் கலாசாலைகளுமாம். இச் செய்யுளில் வேதவேதாந்த சாஸ்திரங்களுக்கும் காவிய நாடக அலங்காராதி சாலைகளுக்கும் உள்ள வேறுபாட்டைக் கம்பர் வருத்தக் காட்டியவிதம் வெகு நன்று, உன்னுதற்கு அரியதாயினும் மறைகள் ஒதுதற்கு எளியவாம். ஒதுதல், என்னும் பதத்திற்குச் சொல்லுதல் படித்தல் என்றும் இரு பொருள்களும் உள. மறைகள் இவ்விரண்டிற்கும் சுலபம். வேதாந்த சாஸ்திரப் பிரசங்கங்கள் செய்வோர் வாய்க்கொரு தடையின்றி, மூலப் பிரகிருதிமுதல் மாயை யீறாகப் பல தத்துவங்களையும், கடாகாசமென்றும் கயிற்றரவென்றும் பிரமரகிடமென்றும் பல நியாயங்களையும் காட்டிக்காட்டிப் பேசுவார். அதனைக் கேட்போரும் தலையை ஆட்டி ஆட்டிக் கேட்பர். எனினும் உபந்நியாசம் முடிந்தபின், யாது கூறினீர், யாது தும் செவி ஏற்றீர், என இருநிறத்தோரையும் வினவுவோமாயின், சொன்ன சொற்களை மீண்டும் சொல்ல வருவரே யல்லாது அவ்வுரைகளின் மெய்ப் பொருளை மனத்துள் உணரவல்லரா யிருப்பதாகக் காணப்படார். கருத்தில் உன்னுதற்கரிய மறைகள் சொற்றொடர்ந்து சொல்லுதற்கு எளியவாயின. ஆதலிற் கம்பர் உன்ன அரும் அருமறை ஒதும் மண்டபம், என்று காட்டும்போது அவரது கடைவாயில் கள்ளச் சிறுநகை துடித்திருக்கும் என நினைக்கின்றோம்.

கலைகளின் நிறம் இதற்கு மாறுனது. கலையின் அனுபவத்தால் விளைகின்ற இன்பம் எத்தகையதென்று வாயாற் சொல்லவே இயலாது. இந்தச் செய்யுள் வெகு அழகாயிருக்கின்றது, இந்த இராகம் கேட்கக் கேட்க இன்பமாயிருக்கின்றது, என்றொருவன் இயம்புங்காலையில் "யானென்றும் காண்கிலேனே, அவ்வழகு அவ்வின்பம் என்பன இது இதுவென விளக்கிச் சொல்?" என வினவுவோமாயின், அவ்வேழை யாது செய்வான்? "ஐய, அதனைச் சொல்ல இயலாது. நீயிரே தெரிந்து கொள்ளல் வேண்டும். உரைக்கடங்கா உவகையை ஒதுவ தெங்ஙனம்," என்பதல்லாது ஊமையாய் எஞ்சி நிற்க நேரிடும். உரைப்பதற் கருமையாய் உணர்வதற் கெளிய தாய் அமைந்தது கலை. ஒன்றுமே கல்லாதாரும் ஒரு சிறிதேனும் இக்கலையுணர்ச்சியைத் தாமாகவே தெரிந்து கொண்டிருப்பர். மற்று மறைமுழுதும் ஓதியிருப் பார்க்கும் அதன் தத்துவப்பொருளின் மெய்நிலையை உன்னுதல் இயலாதுபோவது பெரும்பான்மை நேரிடும்.

"எங்கள் நான்மறைக்கும் எட்டாச் செங்கண்மால்" என்பர் விச்வாமித்திர முனிவர். "கற்றனை யெனையவர் கலேதெரி கழகம்" என்றும், "சொற்கலை யென்னத் தெரிவாரும்" என்றும் கம்பர், கலைகளைத் தெரிந்து கொள்வதற்கு இயன்றனவென்றே எங்குங் கூறுவார்.

அடைமொழிகளைக் கம்பருக்குக் குறைத்த புலவர் யாவரும் சீர்நிறைப்பதற்கும் மோனை எதுகைகளுக்கும் சாதனமானவைகளென்றே எண்ணிச் செய்யுளமைப்பர். பிரிநிலை அடைமொழிகள், கருத்திற்கு இன்றியமையாவாதலால் அவைகளால் தீங்கும் நேராது. ஒரு பொருளின் தன்மை பலவாயிருக்க ஏதேனும் ஒன்றையெடுத்து அடைகொடுக்கும்போது தான், மோனைக்கும் எதுகைக்கும் அசையின் அளவைக்கும் பொருந்துமாயின் போதும் என மதித்துச் சந்தர்ப்பத்திற்கேனும் பொருள் நயத்திற் கேனும் பொருத்தமுடைத்தோ என்னும் கருத்தை நினைவோடு காக்கவேண்டும். அவ்வாறு காப்பவர்களே கவிகளெனப்படுவார். மற்றவர் யாப்பிலக்கணத்திற்கு உதாரணச் செய்யுள் எழுதுபவரேயாவர். இச்செய்யுளில் பயின்ற அடைமொழிகளின் நலத்திலுலேயே நம்கவி மறையும்கலையும் மனிதர்பால் பயிலும் வேறுபாட்டினை இன்றியமையாவகை விளக்கிவைத்த பெருமை மறத்தற்பால தன்று.

இன்னவாறு அந்நன் னகரின்கண் காண்பதற் கமைந்தன யாவும் கம்பரைத் துணைகொண்டு கண்டு கொண்டோம். வானளாவிய மாளிகைகளும், அணி இழை மகளிரும் அலங்கல் வீரரும், பொன்திகழ் செல்வமும், இன்னிசைச் செல்வமும் நன்மணச் செல்வமும், காம நுகர்ச்சியும் கலையின் நுகர்ச்சியும், ஒருங்கே பொலியும் அவ்வயோத்திமா நகரில் இல்லாதார் யாவரோ வெனின்—கள்வரும் வள்ளலாருமே. *

தென்வார் மழையுந் திரையாழியு முட்க நாளும்
வன்வார் முரசம் மதிர்மாநகர் வாழு மாக்கள்
கன்வா நிலாமைப் பொருட்காவலு மில்லை யாதுங்
கொன்வா நிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ.

* It would be interesting to remind our readers of a parallel description of a city in Shakespeare. In Act I, Scene IV of "Pericles", the city of Tharsus is praised by its governor Cleon, in the following manner :—

"A city on whom plenty held full hand,
For riches strewed herself even in the streets ;
Whose towers bore heads so high they kiss'd the clouds,
And strangers ne'er beheld but wonder'd at;
Whose men and dames so jetted and adorn'd,
Like one another's glass to trim them by ;
Their tables were stored full, to glad the sight,
And not so much to feed on as delight ;
All poverty was scorned, and pride so great,
The name of help grew odious to repeat."

EDITOR.

[தெளிந்த நீருடைய மேகமும் அலைகளையுடைய கடலும் காணும்படி எப்பொழுதும் வலிய வார்கட்டிய முரசங்கள் சப்திக்கின்ற அந்தப் பெரிய நகரில் வாழ்கின்ற மாந்தர்களிடையே, திருடுகின்றவர் இல்லாதபடியினால் பொருளைக் காப்பதென்பதில்லை. ஏற்பவர் இல்லாதபடியினால் கொடுக்கின்றவர்களு மில்லை.]

இரப்போரும் கள்வரும் இல்லாத காரணத்தால் அந்நகரியில் பொருளைக் கொடுப்பவரும் காப்பவரும் இலராயினர். பிச்சைக்காரரும் 'போலீஸ்' காரரும் நடமாடா நகரத்தை எண்ண எண்ண நம் மனம் பூரிக்கின்றது. வீட்டிற்கு வீடு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டும், வேட்டை நாய் வளர்த்தும், ஆளும் தடியுமாய்க் கடைவாயிலில் நிற்கவைத்தும் பிச்சைப் பிழைப்பை அடியோடு அகற்றலாம் என்பது இக்கால தனதாய பண்டிதர்களின் கொள்கை. காவல் மிகுதியாற்றான் குற்றங்கள் பெருகுகின்றனவோ அல்லது குற்றம் அதிகரிப்பதால் காவற்சேவகரும் கூடங்களும் அதிகமாகக் காணுகின்றோமோ வென்பது காரண காரிய தொடர்பில் மிகுந்த வாதத்திற்கு இடமானது. வைத்தியர்தாமே சகல நோய்களுக்கும் காரணம் என்று சாதிப்பவர் போலவாவு நாம் போவதற்கு இசையாவிடினும், இச்செய்யுளின் மூன்றுவதடியில் "கள்வாரிலாமைப் பொருள் காவலுமில்லை" எனவரும் வாக்கியத்திற்குக் 'கள்வர் இல்லாதபடியினால் பொருள் காவல் இல்லை' என்பதற்குப் பதிலாய்க் 'கள்வர் இல்லாதபடி பொருள் காவல் இல்லை" எனக் காரண காரியத்தை மாற்றிப் பொருள் கூறுவது இலக்கணத்திற்கு மாத்திரமன்றி நமது அனுபவத்திற்கும் பொருத்தமா யிருக்குமென்றே துணிந்து சொல்ல தற்கால நிகழ்ச்சிகள் இடந்தருகின்றன. கள்வர் உண்டாகாதிருப்பதற்காகக் காவல் என்ற ஒன்றை யாவரும் அமைத்ததில்லை என்பது, அதன் பொருளாகும். திருடல் என்பது இங்குப் பலவித குற்றங்களின் சாதிச்சொல்லாக வந்திருக்கின்றது. சிறைச்சாலையும் காவற் சேவகரும் நியாயவாதிகளும் தண்டனை யதிகாரிகளும் தோன்றுதவரையிலும் எங்கனிலும் குற்றமென்பது தலையெடுக்காதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

கள்வரில்லாமலோர் நகர் நிகழும் என்னும் இச்சொல் முயற்கொம்பனைய வொரு உலகமலவென்று எண்ண வேண்டா. காவற் சேவகர் இன்றியே எவரெவர் உடலும் பொருளும் அவரதாய் நிலைத்திருக்க இயலுமோ என அஞ்சும்படி இந்நாள் வாழ்க்கை நேர்கின்றதெனினும் மூற்கால வுலகினில் காவலும் இல்லை, கள்வரும் இல்லை. ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்குமுன் சீனதேசத்திலிருந்துவந்த பௌத்த சந்நியாசி பாஹியான் என்பவர் இந்தியாவில் யாத்திரைசெய்து, இத்தேசத்தில் வீட்டின் கதவுகளுக்குத் தாழ்கோல் தைக்கின்ற தென்பதொன்று தெரியாதென்றும், "போலீஸ்' சேவகன் தன் கண்ணில் தென்பட்டதே இல்லையென்றும், ஒருதரம்கூடத் தன்னை யாவரும் வழிபறித்த தில்லையென்றும் வியப்புடன் எழுதிவைத்திருக்கின்றார். இந்நிலை இந்த நாட்டிற்கு மாத்திரமே உரியதன்று. வேற்றி வில்லியம் என்பவர் அரசாட்சியில் இங்கிலாந்து தேசத்திலும் ஒரு சிறுபிள்ளை பணப்பை எடுத்துக்கொண்டு பயமில்லாமல் நாடுமுழுவதும் நடக்க இயன்றதா யிருந்ததென்று, கார்லைல் என்னும் புலவர் 'முற்காலமும் தற்காலமும்' என்னும் அவர் நூலில் கூறியிருக்கக் காண்கின்றோம் ஆயின், அயோத்திமாநகரில் கள்வரிலாதிருந்ததைக் கவிகளுக் குரிமையாய அனலிலாப் பொய்யைக் கம்பர் கையாண்ட செய்தி என்று எண்ணலாகாது. வாய்மையன்றி வாளா வொருசொல் அவர்வாய் வாராது.

கொள்வாரிலாததால் கொடுப்பாரிலாததால் நேர்ந்ததே யல்லாது அந்நகரில் ஈகைக் குணம் இன்றி யொழிய வில்லை. கொடுக்கவேண்டும் என்னும் நினைவு எப்பொழுதும் யாவர் மாட்டும் அமைந்திருந்தது. முன் நாட்டுப் படலத்தில், "வண்மையில்லையோர் வறுமை இன்மையால்" என்று கூறிய கருத்தையே மீண்டு மிங்குக் காண்கின்றோம். விருந்தோம்பலாகிய ஈகைச் செயல்கள் எங்கும் நிறைந்திருந்தன. ஆயின், அயோத்தியைத் தலைநகராக வுடைய கோசல நாட்டில், கள்வர் இருந்திலர் வண்மைஇருந்தது என்னும் இரண்டையும் அறியப் பெற்றோம். பெற்றே மெனின் அதனின்று இரண்டொரு விஷயங்களை ஆராய்தல் அவசியமாகின்றது.

அரசியல் சட்டங்கள், தேசத்தின்தன்மை மானுட இயற்கை முதலியவைகளின் தத்துவங்களை நுண்ணிதின் ஆய்ந்து, பிராஞ்சு தேசத்தைச் சேர்ந்த மாண்டஸ்க்யூ என்றவோர் அறிஞர் இருநூறு ஆண்டுகளுக்கு முன் எழுதிய நூலொன்று, உலகிலே முதன்மையாய அரும்பெரும் நூல்களுள் ஒன்றாக வழங்கி வருகின்றது. அதனில் வர்த்தகத் தத்துவத்தைப் பற்றிச் சொல்கின்ற அத்தியாயத்தின் ஒருபகுதி பின்வருமாறு :—

"வர்த்தகத்தின் பயனுய் இயற்கையில் விளைவது அமைதி. வியாபார சம்பந்தம் ஏற்பட்ட இருபெரும் தேசத்தார் ஒருவருக் கொருவர் சார்பாக ஆகின்றனர். ஒரு தேசத்தவருக்கு ஒன்றினை வாங்க வேண்டியது அவசியமானால், மற்றத் தேசத்தவருக்கு அதனை விற்பதிலும் லாபம் இருக்கின்றது; ஒருவருக் கொருவர் இவ்விதம் இன்றியமையாத் தன்மையராகி அவ்விருவர் சேர்க்கையும் ஏற்படுகின்றது

ஆனலோ, வர்த்தகக்கருத்து இன்னவாறு தேசத்தையும் தேசத்தையும் சேர்த்துவைப்பது போலவே அது ஒரே தேசத்திற் குள்ளிருக்கும் ஜனங்களை ஒருவரோ டொருவர் இணங்கிச் சேருமாறு செய்வதில்லை. (பிரஜைகளுள் ஏகபாவம் ஏற்படாவகை வர்த்தகப் பெருக்கம் பிரித்து விடுகின்றது.) வியாபார நினைவே பிரதானமாக விவகரிக்கின்ற தேசங்களிலுள்ள ஜனங்கள், மனுஷ தர்மங்களையும் நல்லறங்களையும் வியவகாரங்களாகவே கையாளக் காண்கின்றோம். மானுடர் தம் கடன்களாக ஆற்றவேண்டிய அற்ப விஷயங்களையும் அங்குக் கூலிக்கே செய்யவும் விலைகூறி விற்கவும் நேரிடுகின்றன.

வர்த்தகத்தில் ஊன்றிய ஊக்கமானது மனிதர் மனதிலே நேர்மையாய வொரு நடுநிலை நியாய நினைவை உண்டாக்குகின்றது. அதனால், ஒரு புறம் அவர் கொள்ளையடித்துக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்று கருதார். ஆனல் மறுபுறமோ, பிறர் நலம் கருதிச் சிற்சில சமயம் சுயநயத்தைக் கையாளப்படாதென்னும் தர்மசிந்தனைக்கு அவர் பயிலும் நடுநிலை நியாயம் எதிராயிருக்கின்றது.

வணிகமென்பது அறவே இல்லாதிருக்கும் நிலைமை, வழிபறி கொள்ளையை விளைவிக்கும். பொருளீட்டும்மார்க்கங்களில் வழிபறிகொள்ளையையும் ஒன்றாக அரிஸ்டாட்டல்(இவர் கிரேக்க தத்துவசாஸ்திரி) வைத்துளார். இது சில தர்மநீதிகளுக்கு மூற்றிலும் மாறுனதுமன்று. வர்த்தகப் பிரதானமான தேசங்களில் விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் குணம் மிக்க அரியதாயிருக்கின்றது. மற்றுச் சோம்பேறிச் சாதியாரிடையே அந்தக் குணம் அத்தியாச்சரிய சம்பூரணமாய் அமைந்திருக்கக் காணப்படும்."

அனுபவத்தாலும் யுக்தியாலும் மாண்டெஸ்க்யூ தணிந்த இந்தத் தேச தத்துவக் கொள்கைகளின் வாய்மையி

னைக் கோசலத்தின் தன்மையினால் அளந்து சோதிப்போமாயின், அன்னார் இயம்பாத விட்டதோர் அரியவிஷயம் விளங்கவரும். வர்த்தக வளம் நிரம்பப்பெற்றது கோசல நாடு என்பதற்கு ஐயமில்லை. நாட்டுப் படலத்தில் கம்பர் நெய்தலின் பெருமையைச் செப்புபவராய் வணிகப் பெருக்கை இவ்விதம் காட்டுவார் :—

முறையறிந் தவாவை நீக்கி
முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கும்
இசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குக் தெய்வப்
பூதலந் தன்னிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்கம்
நெடுமுது காற்று நெய்தல்

[மனுமுறையறிந்து பேராசையை விலக்கிக் கோபிக்க வேண்டிய இடத்துக் கோபித்து, தான் குடிகளிடத்தில் விரும்பக்கூடிய பகுதிப்பொருள் இவ்வளவென்று தேர்ந்து வாங்கி, வாங்கிய அப்பொருளே மீண்டும் மக்குடிகளின் பொருட்டே செலவு செய்துவிடும் கீர்த்தி மிகுந்த தயாதவேந்தன் காப்பதால், பாரம் சிறிதுநீங்கி இளைப்பாற விருக்கும் பூமாதேவியின்மீது, கடற்கரையில் மாக்கலங்கள் சுமந்துவந்த பொன்னுயிய வணிகப் பொருள் பாரங்களே இறக்கிவிட்டுத் தம் பெரியமுதுகை ஆற்றிக்கொள்ளும்.]

இதுவன்றிக் "கலம் சுரக்கும் நிதியம்" என்றதாலும், அயோத்தியின் ஆவணம் கண்டபின் அளகை தோற்ற தாலும், வியாபாரப் பெருக்கம் கோசலநாட்டில் அளவற்றிருந்தது. ஆயின், அம்மேனாட்டுப் பண்டிதரின் கொள்கையின்படி கோசலத்தில் கொள்ளையும் களவும் இருக்கப்படாது. தனக்கு விஞ்சியதே தருமம் என்னும் நினைவு ஒழிந்த தயாள குணமும் இருக்கப்படாது. 'கள்வாரிலாமைப் பொருள் காவலும் இல்லை' என்றதால் முன்னது கோசலத்தில் இருந்ததில்லை என்பது நிலைக்கின்றது. எனினும், வர்த்தகம் பெருகினால் திருட்டுத்தனம் ஒழிந்துவிடும், என்ற மாண்டஸ்க்யூவின் கொள்கைக்கு இணங்கியே இங்கிலே கோசலம் எய்தியது என்பது எம் கருத்தல்ல. இருநூறு வருடங்களுக்குமுன் கண்ட அக் கொள்கை இக்கால சரித்திரத்திற்கு இயன்றதாய்த் தோன்றுவதரிது. இங்கிலாந்து முதலிய தேசங்களில் இந்நாள் வர்த்தகப் பெருமிதம் எத்தனை அதிகமோ, அத்தனை அதிகமே அங்குக் கள்வர்களின் தொகையும், அவர் சுவர்கின்ற வித்தங்களும்.

கள்ளமும் மோசமும் கோசலத்திற் காணுததற்குக் காரணம் வணிகத்தின் மிகுதியேயாயினும் ஆகுக, இனி நாம் கூற இருக்கும் காரணமாக இருப்பினும் இருக்க; மாண்டஸ்க்யூ வகுத்த கொள்கையின் மறுபகுதியைத் தான் இக்குத் தெள்ளிதின் கருதவேண்டியது மூக்கியம். வர்த்தகம் நிறைந்த நாட்டில் மாந்தருக்குத் தந்நயம் மறந்து பிறர்க்குதவிசெய்யும் நினைவு அழிந்துவிடும் என்றனர். விருந்தினர் முகங்கண்டு அன்னவிழாவணியை அன்னர் ஒருபோதும் விரும்பமாட்டார் என்றது நம் பிரஞ்சுப் பண்டிதரின் துணிபு. வர்த்தகத்திற் கவாவும் இந்நாள் மாக்களின் மனநிலையும் செய்கையும் கருதுங் காலத்து இத்துணிபு எற்புடைத்தாயிற்றே என்றெண்ணி வருந்த இடமுளது. எனினும், அவர் கொள்கையின் முற்பகுதியாகிய கன்னாமை இக்கால மேனாடுகளில் பொய்த்தது போலவே, சுயநயத்தால் ஈயாமை என்னும் பிற்பகுதி முற்கால கோசலத்தில் பிழைத்தது. வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்துமன்றி அங்கு வினைவண யாவையே. பழங்களே டிரந்தவர் பரிவு தீர்தர வழங்கவே பொழுது போஞ் சிலர்க்கம் மாகர்.

இங்ஙனம் கம்பருக்கும் மாண்டேஸ்க்யூவிற்கும் மாறுபாடு தோன்றுமாயின் குற்றம் யார்மாட்டுளது? நாட்டினது தத்துவத்தைத் தன்மனத்திலும், சித்திரத்தைத் தன் கண்ணின் முன்னும் முற்றவே நிறுத்தி வைத்தல்லாது கம்பர் இக்கவிகளைப் பாடினரல்லர். பொய்யென்றே யொரு செய்தியைப் புலவர் பாடப்புகுந்தாலும் அது மெய்யேயாய் முடியும். எனின், மெய் விளங்கவரும் இவர் பாசுரங்கள் புகன்ற தொருநாளும் பழுதாகாது. மாண்டெஸ்க்யூவின் வாசகத்தை ஊன்றிப் பார்க்கப் போனால் அவர் கொள்கையின் பிற்பகுதியேனும் நிசமென்றே தெரியவரும். இவ்விரண்டும் பொருந்துவதை, இப்படலத்தில் முடிந்தது முடிக்கவரும் கடையிரண்டு செய்யுள்களில், மறுநான், இனிது காணுவோம்.

T. N. தேஷாசலம்.

அரசியர் மலர்வன மல்லிகை

John Ruskin's
Lilies of Queens' Gardens

(273-வது பக்கத் தொடர்ச்சி.)

இதுவரை, மாதரார் பெற்றுள்ள இயல்பிற்கு ஏற்ற கல்வி முறையையும் அன்னர் தம் மனையையாளும் தன்மையையும் தெரியப் பார்த்தோம். இனி, வீடொழிந்த வெளியிடத்தில் அவர் ஆற்றுதற்கானகருமம்தான் என்ன? அக்கருமத்தின் தன்மையும் எதுவென்பதே நமது மூடிவான கேள்வி. அக்கேள்விக்கு விடைதேடிப் புகுவோம்வாரீர்.

ஆடவர்தம் கருமம் வெளியிடத்தையும் பெண்களின் கருமம் வீட்டின் உள்ளிடத்தையும் பற்றியது என்பதே நாம் கொண்டுள்ள பொதுவான கொள்கையாகும். ஆனால் அக்கொள்கை உண்மையில் பொருத்த முடையதாக இல்லை. புருஷன் ஒருவன் குடும்ப நிர்வாகத்திற்கான சில வேலையையும், சில கடமையையும் கொண்டுள்ளான். அத்துடன் அவன் வேலையும் கடமையும் முடியவில்லை. நாட்டின் நலத்திற்கும், சமூகத்தின் சுகத்திற்கும் எற்ற தான வினை சிலவும் அவனுக்குண்டு. அதேபோல் வீட்டிலும் வெளியிடத்திலும் வேறான தன்மை வாய்ந்த வினை சில மங்கையரும் ஆற்றுதற்குள்ளார்.

குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். குடும்பத்தினுள் புறமிருந்து பகையொன்றும் வாராது காப்பதும், பொருள் தேடுவதும், ஆடவனுக்குரிய தொழிலாகும். தேடிவைத்த பொருள்கொண்டு குடும்பத்தில் ஒழுங்கும் இன்பமும் அமைதியும் கலந்துறையச் செய்தொழிலைப் பெற்றுள்ளார் தெரிவையர்கள். இவ்வண்ணம் ஆண் தொழிலும் பெண்தொழிலும் ஒன்றுத காலத்துக் குடும்பமுமில்லை, வாழ்வுமில்லை, தெரிமின்.

வெளியிடத்தும் இவ்வாறேதத்தமக்குரிய தனித்தொழிலைப் பெற்றுள்ளார் இருபாலாரும். நாட்டை ஒழுங்குவத்

துற ஆளத் துணையிருப்பதும், பிறநாட்டார் உட்புகுந்து அமைதி குலைக்காவண்ணம், தன் புயவலியால் காத்தளிப்பதும், நாட்டின் வளர்ச்சிக்கான கருமம் புரிவதும் ஆண் மகன் தனதாகப் பெற்ற வேலை. மாதரும் அத்தகைய வேலையொன்றை வெளியிடத்திலும் பெற்றுள்ளான். தானுறையும் வீடேபோல் தான்வாழும் நாட்டினிடம் அழகும் ஒழுக்கமும் ஒருங்கே மலரத் தொழில் புரிதல் அவள்வேலை. அதாவது கோட்டைவாயிலில் வாளேயேந்தி நிற்பான் ஆடவன், கோட்டையின் உள்ளிடமிருந்து வினைசெய்வாள் நங்கை.

அன்பு உணர்ச்சியேபோல் மாந்தர் உள்ளத்தின்கண் அரசச் செல்வாக்கைப்பெறும் உணர்ச்சி யொன்று இயற்கையாய் அமைந்துளது. இவ்வுணர்ச்சி தந்தவன் நீ யில்லை; ஆதலினால் அவ்வுணர்ச்சியை யகற்ற நின்னாலியலாது கண்டாய். வேண்டுமானால் நீயொன்று செய்யலாம். பெண்களுக்கே உரியதான அவ்வுணர்ச்சியை இடைதடுத்துச் சரியான பாதையில் வளராது செய்யலாம். இவ்வண்ணம் செய்வதால் நன்மையொன்றும் எற்படாது. மாதர் அவர்க்குரிய அரச வன்மைபெற்று அரசாட்சி செய்யும் ஆவலுக்கு இடைபுகுந்த தடையெல்லாம் வாழ்வைக் கெடுத்து நாசப்படுத்தும். இவ்வுணர்ச்சிக்கு வித்திட்டு நீர் வார்த்து வளரச் செய்தவன் கடவுள். ஆணையினும் சரி, பெண்ணையினும் சரி, அவரவர்க்கியன்ற செல்வாக்கைப் பெறுதலில் தவறொன்றுமில்லை.

எனவே, ஆள்வதற்கு விரும்பும் பெண்ணின்மேல் வெகுளாதீர். மனிதன் நலத்தையொட்டி அவள் அந்நன்மையைப் பெறட்டும். அவ்வன்மைதான் என்ன பார்ப்போம் அவள் பெறும் வன்மையும் அழிப்பதற்கல்ல. அழித்தல் தொழிலும் வன்மையுடன் பொருந்தியதில்லை. பெண்ணொருவள் புலியுருவம் எடுக்கவேண்டுமென்பதல்ல. யாக்கைக்கே இரைதேடும் கவந்தன் கையுமல்ல அவளுக்கு வேண்டியது. சஞ்சலம் உற்றூர் பால்சென்று அவர் கலக்கம் தீர்ப்பதும், நோயுற்றூர் நோய்களைவதும் வருந்துவார் வருத்தம் துடைப்பதும் திக்கற்று நிற்பார்க்கு வழிகாட்டுவதும் காத்தளிப்பதுமான ஈகை நெறி குணங்களே அரச வன்மையின் இலக்கணமாகும். கோலும், செங்கொடியும், மணிமுடியும், எவருக்கும் அரச வைபவத்தைத் தந்ததில்லை. நல்லோரைக் காப்பதும், தீயோரைத் தண்டிப்பதும் அரசின் தொழில். நியாயத்தை அடிப்படையாய், கருணையை வழிப்படியாய்க் கொண்டுள்ள தவிசே சிங்காதனமாகும். இத்தகைய செல்வாக்கைப் பெற்று வீட்டிலும் வெளியிடத்திலும் அரசிகளாய் நம்மங்கைமார் அமைய விரும்பீரோ, சொல்லுங்கள்.

இவ்வண்ணம் வன்மைபெற்று வாழ்க்கையில் பொருந்திய மாதர்கள் இருக்குங்கால் உலகத்தில் தொல்லையேது, தினையேது, கொடுமையேது, பூசலேது. உலகத்தில் நடக்கும் போர்க்கெல்லாம் காரணம் பெண்பாலார் தம் தொழிலை முறையே புரியாமையே. நடக்கும் போரெல்லாம் பெண்கள் தூண்டுதலால் நடப்பதாக நான்சொல்ல வரவில்லை. போர் வராது காக்கவல்ல அவர் வன்மையைச் சரியே உபயோகிக்காததனால் என்றே, சொல்லுகிறேன். யுத்தம் செய்வதே மனித இயற்கை. ஒரு காரணத்தின் பேரால் அவன் சமர்க்களம் புகுவான். மாதர்காள்! நீங்கள் அவன்பக்கம் நின்று செய்வதும் இது விடுப்பது மிதுவென வழிகாட்டி வருவீரேல், இக்கடல் சூழ்ந்த வையகத்தில் கோபமும் தாபமும் இறந்து மடியாவோ. இத்தொழில்விடுத்து நான்குபக்கங்களிலும் சுவரால் சூழப்பட்ட வொரு தோட்டத்திற்குள் அடைத்துக் கொண்டு விடுகிறீர்கள். இதுதான் எனக்கு வியப்பைத் தருகிறது. உலகத்தில் நடக்கும் கொலையும், களவும், போரும், புன்தொழிலும் எனக்கு வியப்பைத் தரவில்லை. மக்கட்பேறு பெற்ற தாய் மார்களது வன்மை உண்ணும் நீரினும் உயிர்க்கும் காற்றினும் தாய்மையானது. கடலினும் மிக்க ஆற்றல் பெற்றது. அத்தகையாள் கைதீண்டப் பணியாத கணவனுண்டோ! அவள் பக்கம் வீற்றிருக்கும் கணவனின் மனத்திடை சஞ்சலம் செல்லுமோ. இத்தகைய உங்கள் செல்வாக்கை போக்கிலே போகவிட்டுப் பக்கத்துவீட்டுப் பெண்ணிடம் என் பெருமை உன்பெருமை என்று பேசிக் காலம்கழிப்பதே எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

உங்கள் தோட்டத்தினுள் செல்கிறீர்கள். மலர்களுடன் விளையாடுகிறீர்கள். குழைந்தலையும் கொடி ஒன்றைத் தாக்கிக் கொழு கொம்பில் சுற்றுகிறீர்கள். உங்கள் தோட்டத்திற்கப்பால் உதிர்ந்த மலர்கள் எத்தனை யெத்தனை, காலடிபட்டுக் காய்ந்த ரோஜாக்கள் எத்தனை யெத்தனை, அறிவீரோ. இங்ஙனமிருக்கக் காலையிலும் மாலையிலும், உங்கள் முகத்தில் யாதொரு துன்பமும் தோன்றுதபடி மலர்களைக்கண்டு மகிழ்ச்சி யுறுகிறீர்கள். வெளியிடத்து வாழும் மலர்பால் உங்கட்கு கருணையில்லையோ. நீங்கள் சுவரிட்டு அடைத்துக் கொண்டிருக்கும் தோட்டம்தான் பிரபஞ்சமேயோ. தாய்மை மனம் படைத்த மாதொருத்தி நடக்கும் இடமெல்லாம் பட்ட மரம் தளிர்க்கும். காய்ந்த மலர் மணக்கும். வாழ்க்கை சிறக்கும். காமச் சுழற்சி யுற்ற காளையொருவன் காதலினால் புனைந்துரைக்கும் பொய்யுரையென்று நான்கழறும் இவ்வார்வமொழிகளைக் கருதாதீர்.

இது மனம் புனைந்த கூற்றன்று. நான் கூறுமிது உண்மை மொழியே. உங்கள் வீட்டுத் தோட்டத்திலும் அன்புடன் காத்து, நீர்விட்டு வளர்க்கும் பூஞ்செடிகள் தான் செழித்தோங்கி வளருகிறது என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். அதை நம்பவும் விரும்புவீர்கள். உங்கள் கருணை நிறைந்த கண்பார்வை மலரொன்றை நிறைந்த அழகுடையதாகச் செய்யுமெனின் காற்றினால் உதிராது, வெப்பத்தால் வாடாது, பனியால் சுருளாது செய்யுமானால், 'தென்றலே மெல்லவந்து பூங்காவிடைப் புகுந்து கவரியென செடிகளை அசையச் செய்வாய்' என்று பனிவீழ்காலத்தில் நீங்கள் செவ்விதழ்திறந்து அழைக்க வாயு வருமானால், அதை மாயவித்தை என்று சொல்லுவார். இவ்வாறு செய்யும் வன்மை பெறுதல் அரியதே. இதனிலும் அரியதும் பெரியதுமான ஒன்று நீங்கள் செய்யலாம். சிருஷ்டியில் சிறந்த மானுடமலரை, இன்னும் சிறப்புச் செய்யவல்லீர். அம்மலரும் உங்களைப் போன்ற இந்திரிய அறிவைப்பெற்றது. அன்புக்கு அன்பு தரும் அம்மலர். அதைப் பரிவுடன் காத்துப் பரிமளிக்கச் செய்தால் அதுவும் உங்களைக் காத்து, உங்கள் வாழ்வை உயர்த்தும். எங்கும் இன்பமும் அமைதியும் வெள்ளமாய் ஓடும். பின்னர் உங்கள் வீட்டுத் தோட்டமின்றி மலையிலும் காட்டிலும் எங்கும் நோக்குமிடந்தோறும் மலரும் செடியுமாயமையுமன்றே!

அரசிகளே, நீங்கள் உங்களதாகிய வன்மையைப் பெற்று முறைவழி வினைசெய்வீரேல், உலகு எல்லாம் இயற்கை வீதி அமைத்து பொலியும். எங்கும் தெய்வ மணங் கமழும்.

K. இராஜகோபாலன்.

முற்றிற்று.

சித்திர கூடம்.

சித்திரகூட மென்றவுடன் இராமன், சீதை இலக்கு மணன் ஆகிய இருவருடனும் சிலகாள் தங்கின மலை யென்று அன்பர்க்கு விரைவில் நினைவு வருமென்பதென் கொள்கை. இம்மலை ஐக்கிய மாகாணத்தில் பண்டில் கண்டு ஜில்லாவில் கர்வி தாலூகாவில் ஹரேட் இண்டி யன்—பெனின்சுலா ரயில்வே பாதையில் சித்திரகூட மென்னும் ஸ்டேஷனுக்குச் சுமார் 3½ மைல் தூரத்திற் கப்பாலுள்ளது. அதாவது பாண்டா வென்னு மிடத்திற் குத் தென்கிழக்கிலுள்ளதிம்மலை. இம்மலையிலும் வான் மீகி முனிவர் வசித்து வந்தனரென்ப.

சித்திரகூட மென்பதற்கு அழகிய கெங்களை யுடைய தென்பது பொருள். வான்மீகி முனிவரும் "இம்மலைச் சிகரங்கள் மிக்க அழகோடு சோக்குவாரது கண் மனங்க ளைக் கவரக் கூடியனவா யிருக்கின்றன" வென்று கூறி யிருக்கின்றார். இராமன் முதலியோர் தங்கினதால் இம் மலை புண்ணியத் தலமென்று கருதப்படுகிறதுமன்றி, அதனதிகுறியாக அம்மூவருடைய திருவடிச் சுவடுகள் பொருந்தப்பெற்ற சரணபாதுக மென்னும் ஓர் கோயி லும் இம்மலையி லிருக்கின்றது. தவிர, இம்மலையினடி வாரத்திலோடுகின்ற சுனி நதிக் கரையிலும் பல புண் ணியத் தலங்களிருக்கின்றன. இவைகளால் நம்மவர் இம் மலை தெய்வத்தன்மை பொருந்தியது எனக் கொண் டாடுகின்றார்கள்.

இம்மலையைக் குறித்து இயற்கையாகக் கூறும் வான் மீகி முனிவர் இரண்டு ஸ்லோகங்கள் கூறுகின்றார். அவர் கூற்றுச் சுருக்கம் வருமாறு. 'நல்ல வாசனையுள்ள மலர் களையும், கனிந்த பழவர்க்கங்களையும், குளிர்ந்த நிழலை யும் எப்பொழுதுங் கொடுக்கின்ற மா, ஈரவல், வேங்கை, உலத்தி, பலா, அழிஞ்சில், வில்வம், திந்துகம், மூங்கில், குமிழ், வேம்பு, மாவிலங்கு, இலுப்பை, பிரப்பு, மாதுளை முதலிய மரங்க ளடர்த்தியாக உள்ளன. நீலம் மஞ்சள் வெள்ளை சிவப்பு முதலிய நிறங்களில் பெரிய கற்கள் பலவிடங்களிலும் ஏராளமாக வுண்டு. பலநிறக் காவிக் கற்களாலாகிய சிகரங்கள் ஈவரத்தங்கள்போற் பிரகாசிக் கும். மந்தாகினி என்னும் நதி ஓடுவதால் பல தீர்த்தங்க ளிருக்கின்றன. பல மிருகங்களும் புட்குலங்களும் ஏராள மாக வுலவும். இரவிலும் பிரகாசிக்கின்ற ஒஷதிகள் இக் கூடத்தில் மிகுதியாக வுண்டு.

ஜலப்ரபாதை ருத்பெதைர்
நிஷ்யந்தைச்ச க்வசித் க்வசித்
ஸ்ரவத்பி பாத்யம் சைல :
ஸ்ரவன் மத இவத்விப :

அதாவது சிலவிடங்களில் அருவி பாய்வதாலும் சில விடங்களில் ஊற்றுப் பெருகி யோடுவதாலும் இம்மலை யானைபோ லிருக்கின்றது என்று கூறியதுமன்றி வித் தியாதரர் முதலியோர் வினையாடு மிடக்களும் அவர்கள் படுக்கும் பல்லவ சயனங்களும் இருந்ததாகக் கூறியுள் ளார். இராமன் இம்மலை யழகுகளை யெல்லாம் சீதைக் குக் காட்டி அவளிடம் இம்மலையி லிருப்பின் பரதனைப் பிரிந்த துக்கமும் நீருமென்று கூறுகிறான். கம்பரும் முனிவரைத் தழுவியே கூறுவதில் செப்பஞ்செய்து புனைந்து தமது காவியத்தில் அமைத்திருக்கின்றார். அதை ஊன்றி நோக்குமிடத்துப் பல அற்புதங்கள் புலப் படுகின்றன. அவைகளை ஈண்டு தொகுத் தெழுதலன்றி வேறன்று.

இராமன் வனத்திற்கு வந்து முதலிற் றங்கின மலை இதே. பரத்துவாச முனிவரைச் சந்தித்து அவர் மூலம் இம்மலைக்கு அங்கிருந்து பத்துக்காத வழிதூர முண் டென்றும் பிறவுமறிந்து கொண்டான். பரத்துவாச ஆசிரமத்திலிருந்து சித்திரகூடத்திற்கு வர யமுனை யாற்றைத் தாண்டவேண்டி யிருந்தது. இராமன் சீதை யோடு இலக்குமணனுந் கட்டப்பட்ட தெப்பத்திலேறி யும், இளையவன் அதன்பின் நீந்தியுஞ் சென்று மறுகரை யேறினர்.

சித்திரகூடத்திற்கும் யமுனை யாற்றிற்கும் நடுவில் ஓர் பாலைவன முண்டென்று கம்பர் கூறுகின்றார். அதன் வழியாகத்தான் அம்மலைக்கு வரவேண்டும். அப்பாலை வனம் சாமானியமானதன்று.

"ஒனையும், மூலமும், வேரும் வெந்து, இருநிலம் தீய்ந்து நினையும் நெஞ்சமும் சுடுவது."

இங்ஙனமொத்த பாலைவனத்திற் சென்றதும் இராம லக்ஷ்மணர் 'பஞ்சனைச் சிவக்கு மென்காற் சீதை இப் பாலைவனத்தை நடந்து கழிக்குந் தரமுடைய ளல்லள்' என்றெண்ணினர். உடனே அக்கொடிய பாலைவனத் தின் இயற்கைத் தன்மை கண்டோ ரதிசயிக்க மாறு பட்டதென்று புனைந்து வர்ணித்திருக்கின்றார் கம்பர். இப்புனைந்துரையைக் கம்பர் சித்திரகூடத்தை வர்ணிப் பதற்குத் தோற்றுவாயாகக் கொண்டாரென் றெண்ணு வதற் கிடந்தருகின்றது. அதன் சுருக்கம் வருமாறு.

பாலை நிலத்திற்குரிய சூரியன், சந்திர கிரணத்தைப் பொழிந்தான். காட்டுத்தீ தாமரைத் தடாகங்களாக மாறின. சுடுகிற பருக்கைக் கற்கள் பறித்துத் தூவின மலர்களாகக் குளிர்ந்தன ! விஷப் பாம்புகளின் பற்களில் அமுதமூறிற்று.மேகங்கள் இடித்துக் கடல்நீரைமொண்டு கொண்டு வந்தன. வேடர் முனிவரைப்போற் சோப மடங்கினர். புலிகளிடம் மான்கன்றுகள் பால்பருகின. இவ்வாறு கோபம், தாபம்,பசி, பகை முதலியனவின்றிச் செழித்திருந்த தப்பாலை தவிர, வெப்பத்திலுற் குகையிற் கிடந்த மலைப் பாம்புகள் நீரிற் கிடந்தனபோற் குளிர்ச்சி யடைந்தன. எரிகின்ற மூங்கில்கள் அணிகலமணி எரிக் கும் மாதர் தோள் எனப் பொலிந்தன. பச்சைக்கம்பளம் விரித்ததுபோல் புற் தளிர்த்துப் பொலிந்த ஸ்தற்று தூடன் மசளிர் போல் மயில்களாடின. பாணரை யொத்து வண்டுகள் பாடின.

"கால மின்றியுங் கனிந்தனகனி ; நெடுங்கந்தம்
மூலமின்றியும் மூகிழ்த்தன ; நிலனுறமுழுதும்
கோலமங்கைய ரொத்தன கொம்பர்கள் ; இன்பச்
சீலமின்றியுஞ் செய்தவம்வேறு மொன்றுளதோ"

வேடர் குடிகள் இருடியர் குடிகள் போன்றிருந்தன. அக்காட்டிட மெங்கும் இந்திரகோபம் தவழ்ந்தன. சூயில்கள் கூவின. குருந்தம் பூத்தன. நாயகரைப் பிரிந்தபெண்கள் மனம்போற்கொதிப்படைந்த அப்பாலை வனம், பிரிந்த நாயகர் வந்தபோதுள்ள பெண்டிர் மனம் போல் இவ்வாறு குளிர்ந்தது. இங்ஙனம் இயற்கையிரிந்த அப்பாலைவனத்தை யம்மூவரும் எளிதிற்கடந்து சென்று, குளிறு வான்மதிக்குழவி தன் சூல்வயி ரொளிப்பப் பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பானைத் தடக்கை களிறு நீட்டுமச் சித்திரகூடத்தைக் கண்டனர். அங்குச் சென்று இராமன் அவ்விடத்துக் காட்சிகளை யெல்லாம் இதற்குமுன் கண்டறியாதவளும், கருப்பேற்கிர முத லியனவற்றை அயோத்தியையிட்டு வந்தபிறகே கண் டதிசயித்தவளுமான சீதைக்குக் காட்டுவதாக,வான்மீகர் அமைத்ததுபோலவே கம்பரும் இராமன் வாக்கில் வைத் துக் கூறுகின்றார். அக்காட்சிகள் வருமாறு.

சந்தன மரங்களும் மற்றைச் செடி கொடிகளும் நிறைந்த அம்மலையில் நீருண்ட மேகங்கள் கலிந்திருக் கின்றன. மரகதப் பாறையின்மேல் வரையாடுகள் தாவிச் செல்லும். யானையையும் விழுங்கும் பாம்புகளின் சட் டைகள் மூங்கில்களில் துகிற் கொடிகள்போல் அசை யும். கவரிமான்கள் மாணிக்கப் பாறைத் தடங்களில் நின்று தமது வெண்ணிற ரோமங்களுடைய வாலை அங்குமிங்கும் வீசிக்கொண்டிருக்கின்றன. சிங்கமானது யானையைப் பிளத்தலால் சிந்தின உதிரத் துளிகளில் அதன் முத்துக்களும் சிதறிக் கிடக்கின்றன. அம்மலை யில் இரவில் சந்திரன் நிலவு சொரிகின்ற தோற்றம் கங்கையாறு பரந்ததுபோ லிருக்கும். யானைகளின் மத்தகத்தில் வேங்கை மலர்கள் உதிரும்.

களிற்றியானை குழைகளை யொடித்து முழையிலிருக் கின்ற தேன்கூட்டிலுள்ள ஈக்களை யோட்டித் தேனை யெடுத்துக் காதலால் சூலுற்ற பெண் யானையின் வாயிற் கொண்டூட்டும்.

"அளிக்கும் நாயகன் மாயையுக் கடங்கின னெனினும்
களிப்பி லிந்தியத் தியோகியைக் கரக்கில னதுபோல்
ஒளித்து நின்றுள ராயினு முருத்தெரி கின்ற
பளிக்க றைச்சில பரிமுக மாக்களைப் பாராய்."

கொடிச்சியர் தங்கணவரோடு கூடாமல் ஊடி உருக்க மாகக் கணவரைப் பார்க்கக்கண்ட ஆண் பெண் சேர்ந்த இன்னரப் பறவைகள் பாடுகின்றன. காற்றி லலைகின்ற மூங்கில் தேன்கூட்டிற் குத்தப் பெருகிய தேன்நிறைந்த கவலைக் கிழங்கெடுத்த குழிகள் அங்குப் பல. அம்மலையி லுள்ள நதியில் குரங்குகள் நீராடும். அவைகளில் ஓர் ஆண்குரங்கின்மேல் பெண்குரங்கு நீரை இறைத்த வுடன் ஆண்குரங்கு கரையேறி நீர்கொண்ட மேகத்தைப் பிடித் துதிர்க்கின்றது. சூரியக்கிரணம் மாணிக்கப் பாறையில் தாக்குவதால் இரண்டு சூரியன் உதித்தபோன் றது.

வண்டுகள் வேங்கை மரக்கிளைகளில் உட்காருதலால் கனம் பொறுக்காமல் அக்கிளைகள் தாழ்ந்தும் அவைகள் பறத்தலால் திரும்பவும் நிமிர்ந்தும் வாட்டத்தால் அக் கிளைகள் அசைந்துகொண்டு மிருக்கும். அங்கு தினைப் புனங் காக்கும் பெண்கள் பறவைகளை யோட்டக் குரு விக்குக் கற்களைக்கொண் டெறிவார்கள். அக்கற்கள் உயர்ந்து சென்று கீழ்விழுதல் வான்மீன்கள் வீழ்வன போன்றிருக்கும். வேடர்கள் அகிற்கட்டையை வெட்டி எரியவிடுவார்கள் ; முனிவர்கள் ஓமம் வளர்த்து அதில் ஆகுதி செய்வார்கள் ; இவ்விரண்டு எரிகளி லிருந்தும் புகை மண்டி யெழுந்து படர்ந்து மேற்செல் லும். நீர் வற்றின கான்யாற்றில் மணிகள் நகூத்திரங் கள்போல் இமையா நிற்கும்.

"மஞ்ச ளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ
செஞ்ச வேகெடு மரகதப் பாறையில் தெரிவ
விஞ்சை நாடியர் கொழுநரோ டிடினர் விமலப்
பஞ்ச ளாவிய சிறடிச் சுவடுகள் பாராய்."

அரம்பைமாதர் நீராடும்போது அவர்தங்கூந்தலிலிருந்து அவிழ்த்து நீத்தமலர்கள் அருவியோடு மிதந்துவரும். அவர்கள் நீராடுதலால் வாசனைத் திரவியங்கள் கலந்து அவ்வாற்றுநீர் நறுமணங் கமழும்.

குறவர் புனங்காக்க அடிக்கும் பறையைக் குரங்கு தாக்கி யடியாநிற்கும். கொடிச்சியர் மகியின் மறுவை அழகு கேடென்று துடைப்பாள். சூரமங்கையர் தம் நாயகரைப் பிரிந்து இம்மலையில் வந்து பல்லவ சயனங் கள் செய்து படுத்திருப்பார்கள் ; அதனால் அத்தளிர்ப் படுக்கைகள் வெப்பத்தால் வாடியிருக்கும். கோங்கு வேங்கை முதலிய மரங்களில் கொடிச்சியர் ஊஞ்சல் கட்டி அதிலிருந்து பாடிக்கொண்டாடுவர் ; அவ்வினிய பாடலைக்கேட்டு அசுணமாவாகிற்கும். மூங்கில் முத்துக் கள் மாணிக்கப் பாறையில் சிதறிவிழுந்து ஒளிவீசும். முருக்க மலர்கள் அவ்வனத்தில் தீ பிடித்ததுபோல மிகுதியாக மலர்ந்து தோன்றும்.

யானைகள் தம் துதிக்கைகளில் தெளிந்த அருவிநீ ரேந்திவந்து மூப்படைந்த முதாதவத்தினரின் குண்டி கையிற் சொரிந்துதவும். இடுங்கிய கண்ணும் இடுக்க ணுற்ற கிழவருமான மாமுனிவோர்க்கு அவர்பால்அன்பு மிக்குடைய குரங்குகள் தம் வாலைக் கோலாகக் கொடுத் துப் பற்றச்செய்து அரிய காட்டுவழிகளைக் காட்டும். அந்தணர் செய்யு மாகுதிக்குத் தக்கவாறு மயில்கள் தங் குறுகிய சிறகுகளால் யாகத்தீயை விசிறி எரியச்செய்யும். சிலம்பிகள் அந்தணர் மார்பிற்கியைந்த மூப்புரி நூலுக் குத் தக்கவாறு பஞ்சினூற் சிக்கற இழைத்த நூலை அவர்க ளிடம் கொண்டு கொடுக்கும். மந்திகள் அவ்வந்தணர்க்கு மூப்பழங்களோடு பல பழவர்க்கங்களைக்கொண்டு கொடுக் கும். கரடிகள் நல்லதிழங்குகளை யகழ்ந்து கொடுத்துதவும். கிளிகள் மலைநெல், தினைக்கதிர், இறுங்கு, அவரை, மூங் கிலரிசி முதலிய தானியங்களைக் கொய்துவந்து பொய் மையற்ற முனிவரின் வீட்டிற் கொண்டு கொடுக்கும். மலைப் பெரும் பாம்புகள் அம்முனிவர் வதிச்செல்லப் படிகளாகத் தாழ்வரையிற் கிடக்கின்றன. இங்ஙன மறிவு குறைந்த விலங்குகளும் ஊழியஞ் செய்கின்ற பெரு மையுடைய முனிவர்க்கு விண்பதங் கொடுக்கத் தேவ விமானங்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கும்.

உடம்பு நோவப்பெற்ற பிடியை அதன்பா லன்புடைய களிறு தன் துதிக்கையால் வருத்தம் பாராது தாங்கிக் கொண்டு நிற்கும். தவிர அந்த யானைகள் மேக முழக் கத்தை யாளியின் முழக்கமென அஞ்சி மருண்டோடும். என்பனவாம்.

இக்காட்சிகளை இராமன் சீதைக்குத் தனித்தனி எடுத் துக் காட்டுகின்றான் என்பது மறுமுறையும் முன்போல நினைவுக்குக் கூறப்பட்டது. இவ்வியற்கை வர்ணனை களைக் கம்பர் பலவித அணிகளுக் குட்படுத்தி யமைத் திருத்தல் கற்றார்க்கன்றி மற்றார்க்கு எளிதில் அறிய முடியாத நிலையிலிருக்கின்றது. ஒவ்வொரு செய்யுளிலும் இராமன் சீதையின் நலம் பாராட்டைப் புனைந்திருப்பது சுவை சொட்டுஞ் சொற்றொடர் அமைந்தனவே. அவை களையும் பிறவற்றையுஞ் செய்யுளிற் கற்றுக் களிப்படைய இஃதோர் நினைப்பூட்டாக எண்ணத்தக்கது. இப்புண் ணிய மலையைத் தரிசித்து வலம் வருவதற்குச் சுமார் 150 வருடங்களுக்கு முன்னிருந்த சத்திரஸால் ராணி யவர்கள் ஒரு வேதிகை யமைத்திருக்கின்றார்.

இக்கட்டுரையால் இராமன் சீதை இலக்குமணன் முதலியோர் மனப்பான்மையும் மலைய னியற்கைவள வழகும், அம்மலையில் வசிக்கும் வேடர்க்கும் விலங்கு களுக்கும் பகை கோபம் பசி முதலியனவின்றிச் சமரச பாவமும் மலைவளங்களும், தெய்வத்தன்மையும், முனி வர் தன்மையும், மாசற்ற முனிவர்க்கு அறிவு குறைந்த விலங்குகள் செய்யுமூழியமும், தேவர்கள் போக்குவரத் தும், மிருகங்களி னியற்கை யறிவும் பிறவும் சித்திரகூட மென்னும் பெயருக்கேற்ப அமையப்பெற்றிருத்தல் அறி யத் தக்கன.

R. முத்தையர்.
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
திருநெல்வேலி.

(6) ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளுக், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளுப்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மஹிமைக்கும் தக்கவாறு கணமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

பாலகாண்டம்	244 பக்கம்	}	6 காண்டம்
அயோத்தியாகாண்டம்	501 ,,		
ஆரணியகாண்டம்	254 ,,		ரூ 15
கிஷ்கிந்தாகாண்டம்	226 ,,		
சுந்தரகாண்டம்	260 ,,		
யுத்தகாண்டம்	702 ,,		

சுந்தரகாண்டம் தனியே ரூ. 2 4 0

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,

1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை

லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4. வெளிநாடுகளுக்கு ரூபாய் 6.

லோகோபகாரி பத்திரிகாலயம்

சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

மாதிரிப்பிரதி இலவம். (7)

யூனைடட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(2)

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-வதுத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிவிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்

பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.

சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகைபாவும் பத்திரமாயிருப்பதும், பாலிவிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யூனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்

யூனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யூரன்ஸ் கம்பனிகளில் இந்த யூனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பிரபரிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிவிஹந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யூனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யூரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யூனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இவ்வேக தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281, ஸ்டார் அண்டு கம்பனி

10, மக்ளீன் தெரு, சென்னை. மானேஜர்கள்.

வர்த்தமானம்.

நாபா மகாராசா:—நாபா மகாராசாவைக் கைது செய்ததின் காரணத்தைப்பற்றிப் பார்லிமெண்டில் கேள்விகள் கேட்கப்போகிறார்கள்.

***

பப்ளிக் பிராசிக்யூட்டர்: —பாரிஸ்டர் K. P. M. மீனன் சென்னை ஐக்கோர்ட்டு பப்ளிக் பிராசிக்யூடராய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

***

துருக்கியில்:—ராசாங்க விஷயங்களிலிருந்தமதவிஷயங்களை நீக்கிவிட்டார்கள். இதன் காரணமாக மதவிஷய பகுதியை கவர்மெண்டிலிருந்து நீக்கிவிடுவதற்கு ஒரு நிபந்தனை எற்படுத்த விருக்கிறார்கள்.

***

மர்காரா கப்பல்:—சென்னைத் துறைமுகத்திலிருந்த மர்காரா என்னும் கப்பலில் நெருப்புப் பிடித்து ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கோணிகளும் சணல் தூற்கட்டுகளும்சேதமாய்ப்போய்விட்டன. நெருப்பு 24 மணிநேரம் வரையும் எரிந்தது. ஆனால் கப்பலுக்கு ஒருசேதமும் இல்லையாம்.

***

வங்காள இராசீய கூட்டம்!—சென்ற சனிக்கிழமை நடந்த இந்தக் கூட்டத்தில் சென்குப்தா என்பவர் சைமன் கமிஷனைப் பகிஷ்காரிப்பது முக்கிய மென்றும் அத்துடன் தேசத்தை ஒன்று படுத்தவேண்டு மென்று சொன்னர். இதற்கு எதுவாக எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய இராச்சியமுறை ஒன்றை எற்படுத்தி அதையே பார்லிமெண்டு ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தி எடுத்துக் காட்டினர்.

***

இந்தியமாது சங்கம்:—இந்தச் சங்கத்தின் 11-வது வருஷக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை அடையாறில் கூடினது. இச்சங்கத்துக்கு இந்த மாகாணத்தில் 71 கிளைகளும் 4000 அங்கத்தினர்களும் உண்டு. Mrs. ஜீனராஜ தாஸர் அக்கிராசனம் வகித்தார். வருஷாந்தர அறிக்கைப் பத்திரம் வாசித்து நிறைவேறிய பின் அக்கிராசனரதியால் பால்ய விவாகத்தைக் கண்டித்து ஒருநிபந்தனை கொண்டுவரப்பெற்று ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்றொரு நிபந்தனை ஸ்திரீகளுக்குச் சொத்துக்களில் உள்ள உரிமைகளைப்பற்றிய சட்டங்கள் மாற்றப்படவேண்டும் என்பதைப்பற்றி கொண்டுவரப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

***

இந்து மகாசபை:—அகில இந்திய ஹிந்து மகாசபை எப்பிரல் மாதம் 7-ம் தேதி ஜப்பல்பூரில் இந்தியா சட்டசபை அங்கத்தினராகிய N. C. கெல்காருடைய தலைமையின்கீழ் கூடியது. இக்கூட்டத்துக்குத் தேசத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

சபைத்தலைவர் செய்த உபன்னியாசத்தில் முக்கியமாய் அவர் எடுத்துக்காட்டிய விஷயங்கள் சுத்தி இயக்கம், சங்கத இயக்கம், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஆகிய இவைகளே. முதலில் முகவுரையாய், ஒவ்வொருவரும் தன் வகுப்பு முன்னேற்றத்தைக் கவனிப்பது அவசியம் என்றும் அவ்விதம் செய்வது தேச முன்னேற்றதுக்குப் பாடுபடுவதோடு முரணுகாதென்பதையும் எடுத்துக் காட்டினர்.

சுத்தி இயக்கத்தைப்பற்றி அவர் சொன்னதாவது:—ஹிந்து மகா சபையின் முக்கியமான முயற்சிகள் அதாவது சுத்தியும் சங்கதமும்இப்போது எல்லாருக்கும்என்ன என்பது தெரிந்திருக்கிறது. அதுமாத்திரமன்று, இம் முயற்சிகள் பிரபலித்துக்கொண்டும் வருகின்றன. சுத்தி இயக்கம் தேசத்தின் எல்லாவிடங்களிலும் பரவி வருகிறது. ஆனால் ஹிந்தி பேசப்படும் இடங்களிலும் மஹா ராஷ்டிராவிலும் இவ்வியக்கம்முன்னேறி வருவது போல மற்ற விடங்களில் வரவில்லை. இவ்வியக்கத்தை மற்ற விடங்களிலும் பரவச்செய்யும்படி சபையார் சிலரைத் தெரிந்து இந்தஇடங்களுக்கு அனுப்பி அவ்வவ் விடங்களிலுள்ள தலைவரோடு கலந்து பேசி இவ்வியக்கத்தைப் பரவச்செய்யவேண்டும்.

சுத்தி என்றால் ஸ்லர் ஹிந்து மதத்திலிருந்து நழுவி விட்டவர்களைத் திரும்பவும் ஹிந்து மதத்துக்குச்சேர்ப்பதுதான் என்று எண்ணுகிறார்கள். இந்த இயக்கத்தின் முடிவு இதுதான் என்பது சரியல்ல. இத்துடன் முன் ஒருபோதும் ஹிந்துக்களல்லாதவர்களையும் தம் மதத்துள் சேர்ப்பதும் இவ்வியக்கத்தி லடங்கியதே. சிறிது நாட்களுக்குமுன் நாசிக்கில் சங்கராச்சாரியார் மிஸ். மில்லர் என்னும் அமெரிக்கமாதை ஹிந்து சமயத்தில் சேர்த்துக்கொண்டது எல்லாராலும் சரி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சங்கராசாரியார் இவ்விதம் ஹிந்து சபையின் முக்கிய கொள்கைளுள் ஒன்றையிருக்கும் இந்தச்சுத்தியைச் செயல்வகையில் எடுத்துக்காட்டியது மிகவும் மெச்சத்தக்கது. மற்றைய சங்காரச்சாரியார்கள் இது விஷயத்தில் பின்வாங்கி நிற்பதற்குக் காரணம் அவர்கள் இந்து சமய உண்மைகளை எழுத்தளவில் தெரிந்ததே யல்லாமல் அவைகளின் சரியான கருத்தைத் தெரியாதிருத்தல்போலும். மேலும் அவர்கள் தைரியம் இல்லாததினால் தாங்கள் இவ்விதம் மாற்றல்களை எற்படுத்த வேண்டுவதற்கு வெளி ஆதரவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இவ்விதமாக மாறுதலில்லாமல் நிலைத்திருக்க வேண்டு மென்றிருப்பது முடியாத காரியம்.

சங்க இயக்கம் சுத்தி இயக்கத்தைப்பார்க்கிலும் மிகவும் முக்கியமானது. பின்னதிற்கு எல்லை உண்டு; சங்கத முயற்சிக்கு முடிவில்லை. இந்த விஷயத்தை வரையறுத்துச்சொல்வது முடியாது. ஆனால் சில முக்கியமான விஷயங்கள் கவனிக்கத்தக்கன. ஹிந்து மதத்துள் அடங்கியிருக்கும் வெவ்வேறான வகுப்பினரையும் ஒன்று படுத்துவதே ஆரம்பத்தில் செய்யவேண்டிய வேலை. பிராமணர் பிராமணரல்லாதாருக்கிடையில் எற்பட்டிருக்கும் விரோதத்தை மாற்றவேண்டும். இவ்விரோதம் சமய காரணமாய் எற்பட்டதல்ல. உலக விஷயங்கள் காரணமாக உண்டானதே. கல்வி பரவுதலால் இவ்வித்தியாசங்கள் சமப்பட்டு வருகின்றன. எஞ்சியதற்குப் பிராமணர் தாங்கள் இதுகாறும் பெற்றுவந்த சில உரிமைகளைத் துறக்கவேண்டும். இன்னென்று தீண்டாமைமுறையை முற்றிலும் அகற்றவேண்டும். தீண்டாதார் கோயில்களுக்குட் செல்லவேண்டுமென்பதற்குத் தடை பிராமணர்கள் தங்களுக்குத்தான் மூலஸ்தானத்துக்குப் போவதற்குச் சுதந்தரம் இருக்கிறதென்று சொல்வதே. இந்த விவாதத்தைத் தீர்ப்பதற்கு வழி மூலஸ்தானத்தில் ஒருவரும் போகாமல் தடுப்பதே. விக்கிரகம் இருக்கும் இடத்திலிருந்து ஒரு குறித்த எல்லைக்குள் ஒருவரும் போகக்கூடா தென்று ஏற்பாடுசெய்து அந்த எல்லை வரைக்கும் எவரும் போகலாம் என்ற முறை செய்தால் தீண்டாதார் என்று சொல்லப்படுபவர்களும் அந்த எல்லைவரைக்கும் போகத்தகுந்தவரா யிருப்பார்.

188998

(1)

இண்டஸ்டிரியல் & புரூடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய ஆப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)

Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுகும் சந்து ஸுரப் சந்து K. T.

வேல்ஜி லக்ஷ்மி B. A. L. L. B.

மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.

லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோவிஷா எம். மேத்தா M. A. L L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.

வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுத்த உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயின்தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3)

TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues"—Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition **Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)